

# கோயம்புத்தூர் மாநகராட்சி



## வரவு செலவுத் திட்டம் 2025 - 2026

# கோயம்புத்தூர் மாநகராட்சி

## வரவு செலவுத் திட்டம்
## 2025 - 2026



## திருக்குறள்

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

குறள் – 398 அதிகாரம் – 40

## விளக்கம்

அப்படித் தம்முடைய ஆயுள் முழுதும் நல்லறிவை நாடிக் கற்பவருக்கு ஒரு பிறப்பில் கற்றுக் கொள்ளும் நல்லறிவு இனி வரக்கூடிய ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பளிக்கும்.

– திருவள்ளுவர்



முத்தமிழறிஞர்

டாக்டர் **கலைஞர்** அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்

திரு. **கே.என். நேரு** அவர்கள்



மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

திரு. V **செந்தில் பாலாஜி** அவர்கள்



**திருமதி. கா.ரங்கநாயகி**

மாண்புமிகு மேயர்

## முகவுரை

வணக்கம்,

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு."

**விளக்கம் :**

தண்ணீர் மட்டத்தின் அளவுக்குத்தான் தாமரை மலரின் தண்டு நீளும். அதைப்போல் மக்களுடைய ஊக்கத்தின் அளவுக்குத்தான் அவர்களுடைய வாழ்க்கைச் சிறப்புகள் உயரும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி மக்களின் நலனுக்காக வளர்ச்சி பாதையில் தமிழகத்தை தலைநிமிர்ந்து வழி நடத்திச் செல்லும் தமிழக அரசின் சீரிய வழிகாட்டுதலுடன் ஒவ்வொரு நாளும் புதுப்புது திட்டங்கள் வகுக்கப்பட்டு பல்வேறு நலன் பயக்கும் மக்கள் வளர்ச்சி திட்டங்களை பொது மக்களுக்கு பயனளிக்கும் வகையில் வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி கொள்வதுடன் 2025-26 நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதில் மிகுந்த பெருமையும் உவகையும் அடைகிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வளர்ச்சிக்காக போதிய நிதியுதவி வழங்கி பல்வேறு திட்டங்களை செவ்வனே செயல்படுத்த தொடர்ந்து வழி நடத்துகின்ற மாநில அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

கடந்த ஆண்டின் பெரும்பாலான திட்டங்கள் செயல்வடிவம் பெற்று பொது மக்களின் நலன் காத்துள்ள நிலையில், 2025-26ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலுள்ள

சிறப்பான செயல்பாட்டு வளர்ச்சி பணிகளால் கோயம்புத்தூர் மாநகரம் மேலும் வளர்ச்சி பாதையில் சிறப்பான நடைபோட்டு, தனிச்சிறப்பு மாநகராக விளங்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கோவை மாநகரின் 100 வார்டுகளின் பரப்பளவு 257.04 சதுர கிலோ மீட்டர் உள்ளடங்கிய பகுதியில் தற்போது உத்தேசமாக 22 இலட்சம் மக்கள் தொகை என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் / அனைத்து மக்களும் முன்னேறும் வகையில் தற்போது மாநகரின் எல்லை விரிவாக்கம் செய்ய உத்தேச முடிவு செய்து உத்தேச அரசாணை (நிலை) எண். 201 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள். 31.12.2024ன்படி, 1 (ஒன்று) நகராட்சி / 4 (நான்கு) பேரூராட்சிகள்/ 9 (ஒன்பது) ஊராட்சிகள் என மொத்தம் 14 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகரம் பெரு நகரமாக விளங்கும் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோரின் ஆசியோடும், வழிகாட்டுதலோடும் பொது மக்களின் நலன் காக்கும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை முழுமையாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வழங்கி அதனை செயல்படுத்த மற்றும் உறுதுணையாக இருந்து வரும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் ஆகியோருக்கு இத்தருணத்தில் கோவை மாநகர மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான **"செம்மொழி பூங்கா"** ரூ.167.25 மதிப்பீட்டில் 18.12.2023 தேதியில் அடிக்கல் நாட்டப்பட்டு

தற்போது இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. பொது மக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் வருவதில் மிகவும் பெருமிதம் அடைகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் "**மக்களுடன் முதல்வர் மற்றும் உங்கள் தொகுதியில் முதல்வர்**" போன்ற பொது மக்களின் குறைதீர்க்கும் முகாம்கள் மூலம் பெறப்பட்ட உள்ளாட்சி அடிப்படை வசதிகள் சார்ந்த மனுக்கள் மீது பல்வேறு குறைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாரம் செவ்வாய் கிழமைகளில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் நடத்தப்பட்டும் பல்வேறு குறைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

தமிழக அரசால் சிறந்த மாநகராட்சி என தேர்வு செய்யப்பட்டு உரிய சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசும் பெறப்பட்டுள்ளது, இதற்கு உறுதுணையாக இருக்கும் கோவை மக்கள், அரசுசாரா அமைப்புகள், தன்னார்வு தொண்டு நிறுவனங்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் ஆதரவு அரசின் கரங்களை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது. இது மென்மேலும் தொடரும் என்பதில் ஐயமில்லை என்று சமர்ப்பிக்கிறேன்.

அன்புடன்

திருமதி. கா.ரங்கநாயகி
மாண்புமிகு மேயர்



**திரு. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப.,**

**ஆணையாளர்**

## முகவுரை

கோயம்புத்தூர் மாநகராட்சியின் நிலையான வளர்ச்சியை மையமாகக் கொண்டு, கோயம்புத்தூர் மக்களின் எதிர்காலத்திற்கான 2025-2026-ம் நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையினை முன் வைப்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கட்டமைப்பு மற்றும் பல்வேறு நலத்திட்டங்களிலும் அதிக முன்னேற்றம் அடைவதில் அரசு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவிற்கு எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் சிறந்த மாநகராட்சியாக தேர்வு செய்யப்பட்டு சான்றிதழ் மற்றும் ரொக்க பரிசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்பதில் பெருமிதம் கொள்வதுடன் பொதுமக்களின் ஆதரவிற்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மதிப்புமிக்க வழிகாட்டுதலுடன், கோயம்புத்தூர் மாநகராட்சியின் முன்னேற்றம் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சி பயணத்திற்கு மாநகராட்சியை கொண்டு செல்ல திறம்பட ஊக்குவிக்கும் வகையில் அனைத்து களங்களிலும் சீர்த்திருத்தங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்நிதியாண்டின் நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டவும் மக்களிடையே நற்சிந்தனையை ஊக்குவிக்கும் பொழுதுபோக்கு இடமாக செம்மொழிப் பூங்கா 45 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வருகிறது. அவற்றில் மருத்துவ தாவரத் தோட்டம், நீர்வாழ் தோட்டம், மனம் மிக்க தோட்டம், அரங்குகள், திறந்தவெளி அரங்குகள், விளையாட்டு மைதானங்கள், பன்னாட்டு மையம் போன்ற வசதிகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இந்நிதியாண்டில் கொண்டுவரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்,
நகர்க ளெங்கும் பலப்பல பள்ளி’

எனும் பாரதியின் கூற்றின்படி மாநகராட்சி பள்ளி மாணவர்களை முறையாக வழிநடத்தி, வருங்கால இளைய தலைமுறைக்கு நல்லறிவு, திறமை, பண்பாடு, நற்பண்புகள் கற்பித்து இச்சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்ய வைக்கும் விதமாக இந்நிதியாண்டின் கல்வி திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளை பார்வையிடுதல், அறிவியல் கண்காட்சி நடத்துதல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், வாசிப்பு திறனை மேம்படுத்துதல், வினாடி வினா போட்டிகள் நடத்துதல், VR ஆய்வகங்கள் உருவாக்குதல், சதுரங்க பயிற்சி வழங்குதல், கல்விசார் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகள் வழங்குதல் ஆகியவை முக்கிய அம்சங்கள் ஆகும்.

இம்மாநகராட்சியில் சுகாதார சேவைகள் உள்ளிட்ட பல்வேறு சுகாதார நடவடிக்கைகள், குடும்ப நல மருத்துவமனைகள், நோய் தடுப்பு மருந்து, தாய் சேய் நலன் உள்ளிட்ட பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் வழங்கப்பட உள்ளது. மாநகராட்சி மக்களின்

ஆரோக்கியமான வாழ்க்கையை மேம்படுத்துவதில் இந்நிதிநிலை அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிதியாண்டிற்கான கோயம்புத்தூர் மாநகராட்சியின் நிதிநிலை திட்டத்தில், சாலைகள் மேம்படுத்துதல், நடைபாதைகள் அமைத்தல், தெருவிளக்குகள் அமைத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கெனவும், மகளிருக்கு எனவும், பிரத்யேக பூங்காக்கள், திட்டச்சாலை, பொது கழிப்பறைகள் அமைத்தல், குடிநீர் விநியோகம், மழைநீர் வடிகால்கள் அமைத்தல், பாதாள சாக்கடைத் திட்டம், திடக்கழிவு மேலாண்மை மேம்படுத்துதல், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் (Multi level car parking) மற்றும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் பேருந்து நிலையங்களை சீரமைத்தல், உள்ளிட்ட பல்வேறு பணிகளை நிர்வகிப்பதிலும், செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிதிநிலை அறிக்கை கோயம்புத்தூர் மாநகராட்சி மக்கள் வாழ்க்கையை வெற்றிகரமாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டு செல்ல உதவும் என்று நான் நம்புகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்



திரு. சிவகுரு பிரபாகரன், இ.ஆ.ப.,
ஆணையாளர்

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| ஒட்டு மொத்த நிதி நிலைமை | | 1 |
| கல்விப்பிரிவு | | 2 |
| 1 | மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வகங்கள் மேம்பாடு செய்தல் | 2 |
| 2 | மாநகராட்சி பள்ளிகளில் Public Address System அமைத்து தருதல் | 2 |
| 3 | Smart Class அமைத்து தருதல் | 2 |
| 4 | மாநகராட்சி பள்ளி அரசு பொதுத் தேர்வுகளில் 100 % தேர்ச்சி வழங்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக கல்விச் சுற்றுலா அழைத்து செல்லுதல் | 3 |
| 5 | கல்விசார் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் விரிவுபடுத்துதல் | 3 |
| 6 | பள்ளி மாணவர்களுக்கான தொழிற்சாலைகளை பார்வையிடும் திட்டம் (Industrial Visit) மேற்கொள்ளுதல் | 3 |
| 7 | மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கென உளவியல் ஆலோசனை வழங்குதல் | 4 |
| 8 | மாநகராட்சி பள்ளிகளில் 12-ம் வகுப்பு பயின்று ஐ.ஐ.டி., என்.ஐ.டி., மற்றும் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கான கல்வி கட்டணம் (Tution fees) செலுத்துதல் மற்றும் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வழங்குதல். | 4 |
| 9 | மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பாடங்களில் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெரும் மாணவ, மாணவியருக்கும் ஊக்கத் தொகை மற்றும் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெறச்செய்யும் வகுப்பாசிரியர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்குதல் | 5 |
| 10 | மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர்களுக்கான கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance) நடத்துதல் | 5 |
| 11 | அறிவியல் கண்காட்சி நடத்துதல் | 5 |
| 12 | இருக்கையுடன் கூடிய மேசைகள் (Desk, Bench) வழங்குதல் | 6 |
| 13 | மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்குதல் | 6 |
| 14 | மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும் வகுப்பறைகள் கட்டவும் / கூடுதல் வகுப்பறைகள் மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளுதல் | 6 |
| 15 | மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும் கழிப்பறை வசதி ஏற்படுத்துதல். | 7 |
| 16 | மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கற்றல், கற்பித்தல் பயிற்சி கையேடு (Minimum Learning Material), வரைகட்டத்தாள் மற்றும் வரைபடத்தாள் (Graph & Map) வழங்குதல் | 7 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 17 | மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாலை சிற்றுண்டி வழங்குதல் | 8 |
| 18 | விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் | 8 |
| 19 | அங்கன்வாடி மையங்கள் புதுப்பித்தல் | 8 |
| 20 | மாநகராட்சி அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு Interactive learning and sustainability வகுப்புகள் வழங்குதல். | 8 |
| 21 | தூய்மை பாரத திட்டத்தின் கீழ் (SWACHH BHARAT MISSION) அனைத்து மாநகராட்சி பள்ளிகளிலும் குப்பைத் தொட்டிகள் வைத்தல். | 9 |
| 22 | மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும், லேப்டாப் (Laptop) / கம்ப்யூட்டர், யு.பி.எஸ். (Computer, UPS), இன்வெர்ட்டர் (Invertor) பேட்டரி வழங்குதல். | 9 |
| 23 | பள்ளிக்கு தொடர்ந்து வருகை புரியாத மாணவ மாணவியர்களுக்கு அவர்தம் பெற்றோர்களுடன் ஆலோசனைகள் வழங்குதல். | 9 |
| 24 | மாநகராட்சி பள்ளிகளில் 95 விழுக்காடுக்கு மேல் தேர்ச்சி பெறும் பள்ளிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல். | 9 |
| 25 | மாநகராட்சி பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த நாளிதழ்கள் வழங்குதல் | 10 |
| 26 | விளையாட்டு மைதானங்கள் உட்பட விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் | 10 |
| 27 | மிதிவண்டிகள் நிறுத்த மேற்கூரையுடன் கூடிய இடம் அமைத்து தருதல் | 10 |
| 28 | கூரையுடன் கூடிய உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல் | 11 |
| 29 | தட்டச்சு பயிற்சி அளித்தல் | 11 |
| 30 | வினாடி வினா போட்டிகள் நடத்துதல் | 11 |
| 31 | கிரிக்கெட் பயிற்சி அளித்தல் | 11 |
| 32 | பள்ளிகளுக்கு இசைக்குழு பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்குதல் | 12 |
| 33 | எரியூட்டும் இயந்திரம் (Incinerator) வழங்குதல் | 12 |
| 34 | எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகள் துவங்குதல் | 12 |
| 35 | கல்விப்பிரிவு புனரமைத்தல் | 13 |
| 36 | VR ஆய்வகம் உருவாக்குதல் | 13 |
| 37 | பள்ளி மேலாண்மைக் குழு மூலம் ஆசிரியர்கள் நியமித்தல். | 13 |
| 38 | மாநகராட்சி பள்ளிகளில் CCTV அமைத்தல் | 13 |
| 39 | மாநகராட்சி பள்ளிகளில் அரங்கம் (Auditorium) அமைத்தல். | 14 |
| 40 | மாநகராட்சி பள்ளிகளில் 8-ம்வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டுதல் (Mentoring) வழங்குதல். | 14 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 41 | மாணவர் படைப்புகள் புத்தகமாக வெளியிடுதல் | 14 |
| 42 | மாணவர் தொடர் கல்வித் திட்டம் கண்காணித்தல் | 14 |
| 43 | சதுரங்க பயிற்சி வழங்குதல் | 15 |
| 44 | அழைப்பு மையம் (Call Centre) அமைத்தல் | 15 |
| 45 | மாநகராட்சி பள்ளி தரம் உயர்த்துதல் | 15 |
| பொது சுகாதாரப்பிரிவு | | 16 |
| 1 | சீதாலட்சுமி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதிரி மகப்பேறு சிகிச்சை மையம் (Model Primary Maternity Care Center) | 16 |
| 2 | தாய்சேய் நல கண்காணிப்பு அழைப்பு மையம் (Maternal Chiid Health Call Centre) | 17 |
| 3 | டயாலிசிஸ் மையம் (Dialysis Centre) | 17 |
| 4 | ஏழு நகர்புற சமுதாய சுகாதார நிலையங்களில் பொதுமக்களுக்கு இலவசமாக பல்சிகிச்சை வழங்குதல். | 18 |
| 5 | மூன்று பொது சுகாதார ஆய்வகங்களுக்கு பணியாளர்களை நியமித்தல் | 18 |
| 6 | நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (32 நிலையங்கள்) மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் | 19 |
| 7 | இருபது நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய தரஉறுதி, தரநிலை (NQAS) மதிப்பீடு செய்ய நிதி ஒதுக்கீடு செய்தல் | 19 |
| 8 | சுகாதார நிலைய கட்டுமான பணிகள் (3 புதிய கட்டிடம் மற்றும் 6 கூடுதல் கட்டிடம்) | 19 |
| 9 | ஐந்து புதிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல் | 20 |
| 10 | வீடில்லா நாய்களுக்கு ரேபிஸ் நோய் தடுப்பூசி செலுத்துதல் | 20 |
| 11 | பொது சுகாதாரப் பிரிவிற்கு கணினி உள்ளிட்ட தளவாடப் பொருட்கள் வழங்குவது | 20 |
| 12 | வார்டு எண்.83 பந்தைய சாலை சுகாதார அலுவலகம் புனரமைத்தல் | 21 |
| 13 | சுகாதார வார்டு அலுவலகங்களுக்கு தானியங்கி குடிநீர் இயந்திரம் கொள்முதல் செய்தல் | 21 |
| பொறியியல் பிரிவு | | 22 |
| 1 | நமக்கு நாமே திட்டம் | 22 |
| 2 | சாலை மேம்பாட்டு பணிகள் முதற் கட்டம்<br>சாலை மேம்பாட்டு பணிகள் இரண்டாம் கட்டம்<br>மூன்றாம் கட்டமாக சாலைப் பணிகள் | 22 |
| 3 | கிராஸ்கட் சாலை ஸ்கைவாக் | 23 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 4 | K.G. தியேட்டர் சாலையில் வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 24 |
| 5 | உக்கடம் பேருந்து நிலையம் மறுசீரமைத்தல் | 24 |
| 6 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் மறுசீரமைத்தல் | 26 |
| 7 | சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மறுசீரமைத்தல் | 27 |
| 8 | கிராஸ்கட் சாலையில் வணிக வளாகம் கட்டுதல் | 28 |
| 9 | கிராஸ்கட் சாலையில் பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 28 |
| 10 | ராஜ வீதியில் பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 28 |
| 11 | டி.பி சாலையில் உணவகம் கட்டுதல் | 29 |
| 12 | கிருஷ்ணசாமி சாலையில் வணிக வளாகம் அமைத்தல் | 29 |
| 13 | தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் (TNIUS) புனரமைத்தல் | 29 |
| 14 | சக்தி சாலையிலிருந்து அவிநாசி சாலை வழியாக திருச்சி சாலையில் உள்ள நொய்யல் வரை சங்கனூர் பள்ளத்தின் இருபுறமும் தடுப்புச்சுவர் கட்டி தார்சாலைகள் அமைத்தல் | 30 |
| 15 | HLR பாரதி பார்க்கில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு வர்ணம் பூசுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 30 |
| 16 | பிரதான அலுவலகம் மற்றும் மண்டலம் / வார்டு அலுவலக வளாகங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 30 |
| 17 | நீர் நிலைகளை பராமரித்தல் | 31 |
| 18 | நொய்யல் ஆற்றினை மேம்படுத்துதல் | 31 |
| 19 | சுய உதவி குழுக்கள் மூலம் பூங்காக்கள் பராமரித்தல் | 33 |
| 20 | மாமன்ற உறுப்பினர்களுக்கு வார்டு பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்தல் | 33 |
| 21 | அறிவுசார் மையத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் | 33 |
| 22 | ராஜவாய்க்கால் தானியங்கி முறையில் Sluice Shutter அமைத்தல் | 34 |
| 23 | சமுதாயக்கூடம் புதியதாக கட்டுதல் | 34 |
| 24 | முனிசிபல் பத்திரம் (Municipal Bond) | 35 |
| 25 | மழைநீர் வடிகால் அமைத்தல் | 35 |
| 26 | STEM பூங்காவில் அறிவியல் சார்ந்த வகையில் கூடுதல் மேம்பாடு | 35 |
| 27 | பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல் | 35 |
| 28 | அறிவுசார் மையம் அமைத்தல் | 35 |
| 29 | ABC மையத்தினை பராமரித்தல் | 36 |
| 30 | நவீன ஆடு அறுவை மையம் மேம்படுத்துதல் | 36 |
| 31 | புதியதாக ABC மையம் அமைத்தல் | 36 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 32 | புதியதாக எரிவாயு தகன மேடை அமைத்தல் | 36 |
| 33 | மழைநீர் சேகரிக்கும் தொட்டி அமைத்தல் | 37 |
| 34 | சுண்டக்காமுத்தூர் குளம் | 37 |
| 35 | Smart Lab | 38 |
| 36 | ஒருங்கிணைந்த நவீன விளையாட்டு அரங்கம் அமைத்தல் | 38 |
| 37 | பூங்காக்கள் பராமரிப்பு செய்தல் | 38 |
| 38 | மாநகராட்சி கலையரங்கம் புதுப்பித்தல் | 39 |
| 39 | ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் (ICCC) கூடுதல் அபிவிருத்தி பணிகள் | 39 |
| 40 | மாநகரத்தினை அழகுபடுத்துதல் | 39 |
| 41 | தெருக்களுக்கான பெயர் பலகைகள் அமைத்தல் | 39 |
| 42 | ஆகாய தாமரை அகற்றுதல் | 40 |
| 43 | சிங்காநல்லூர் குளத்தில் கூடுதலாக அபிவிருத்தி பணிகள் | 40 |
| 44 | திவான் பகதூர் சாலையில் உள்ள பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் | 40 |
| 45 | பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பாதுகாப்பான வீதிகள் (Safe Streets) அமைத்தல் | 41 |
| 46 | மோட்டார் அல்லாத போக்குவரத்தினை மற்ற பகுதிகளில் செயல்படுத்த திட்டம் | 41 |
| 47 | பேருந்து நிழற்குடை அமைத்தல் | 42 |
| 48 | விடுபட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் அமைத்தல் | 42 |
| 49 | புதியதாக வார்டு அலுவலகம் அமைத்தல் | 42 |
| 50 | சாலை சந்திப்பில் மையத் தடுப்பு சுவர் ஏற்படுத்தி பசுமை பகுதியாக மாற்றுதல் | 42 |
| 51 | போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள தெரு விளக்குகளை மாற்றியமைத்தல் | 42 |
| 52 | மழைநீர் வடிகால்களை தூர்வாருதல் | 43 |
| 53 | சிமெண்ட் சாலைகள் அமைத்தல் | 43 |
| 54 | பூங்காக்களில் மரம் நடுதல் | 43 |
| 55 | துடியலூர் வாரச் சந்தை, புதியதாக வணிக வளாகம் கட்டுதல் | 43 |
| 56 | துடியலூர் பேருந்து நிலையம் | 44 |
| 57 | கொடிசியா சாலையில் வணிக வளாகம் அமைத்தல் | 44 |
| 58 | ஆவாரம்பாளையம் ஷோபா நகர் பகுதியில் பாலம் அமைத்தல் | 44 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 59 | பூங்கா நகர் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் | 45 |
| 60 | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துதல் (Airport Autority of India) | 45 |
| 61 | சிறுவாணி சாலை மற்றும் மருதமலை சாலை சந்திப்பில் புதிய பாலம் அமைத்தல் | 45 |
| 62 | ஆம்னி பேருந்து நிலைய வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 46 |
| 63 | விளையாட்டு மைதானத்துடன் கூடிய நடைபாதை அமைத்தல் | 46 |
| 64 | சமுதாயக்கூடம் அமைத்தல் | 46 |
| 65 | கருப்பராயன் பாளையம் குளத்தை மேம்படுத்துதல் | 46 |
| 66 | மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலங்கள் திரும்பக் கட்டுதல் | 47 |
| 67 | இரவு நேர பாடசாலை (Study Center) | 47 |
| 68 | வாய்க்கால் ஓரம் தடுப்புச் சுவர் கட்டுதல் | 47 |
| 69 | திருமண மண்டபம் மேம்பாட்டு பணிகள் | 47 |
| 70 | பேருந்து நிழற்குடை அமைத்தல் | 48 |
| 71 | வெள்ளலூர் பேருந்து நிலையத்தினை லாரிப் பேட்டையாக மாற்றுதல் | 48 |
| 72 | பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணி செய்தல் | 49 |
| 73 | புதிய இணைப்பு சாலைஅமைத்தல் | 49 |
| 74 | இத்லாம் பாளையம் குட்டை மேம்படுத்துதல் | 50 |
| 75 | எரியூட்டு மயானங்கள் அமைத்தல் | 50 |
| 76 | காமராஜர் நகர் பகுதியில் வணிக வளாகம் கட்டுதல் | 51 |
| 77 | கே.என்.ஜி புதூர் முதல் டிவிஎஸ் நகர் வரையில் உள்ள பள்ளத்தில் தடுப்புச் சுவர் கட்டுதல் | 51 |
| 78 | சேரன் நகர் பகுதியில் வணிக வளாகம் கட்டுதல் | 52 |
| 79 | சரவணா நகர் முதல் சங்கனூர் வரை மழை நீர் வடிகால் கட்டுதல் | 52 |
| 80 | சேரன் நகர் பகுதியில் IOT அடிப்படையிலான குடிநீர் திட்டம் | 52 |
| 81 | நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மராமத்துப் பணிகள் | 53 |
| 82 | கட்டிடங்களை மேம்படுத்துதல் பணிகள் | 53 |
| 83 | நகர்புற நல்வாழ்வு மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல் | 53 |
| 84 | குடிநீர் குழாய்களை பராமரித்தல் | 54 |
| 85 | கஸ்தூரி நகர் பகுதியில் அடிப்படை பணிகள் மேற்கொள்ளுதல் | 54 |
| 86 | சித்ரா நகர் குட்டையினை மேம்படுத்துதல் | 54 |
| 87 | பழுதடைந்த நடைபாதையை மாற்றியமைத்தல் | 54 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 88 | செங்குளம் கசிவு நீரினை மடை மாற்றம் செய்தல் | 55 |
| 89 | செங்குளம் மேம்பாட்டு பணிகள் | 55 |
| 90 | மகளிர் பூங்கா மற்றும் மாற்றுத்திறனாளிகள் பூங்கா அமைத்தல் | 56 |
| 91 | வ.உ.சி.பூங்காவில் பறவைகளுக்கென பூங்கா அமைத்தல் | 56 |
| 92 | சங்கனூர் பள்ளத்தில் பாலம் அமைத்தல் | 56 |
| 93 | ரேஸ்கோர்ஸ் பகுதியில் வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல் | 57 |
| 94 | ஸ்கேட்டிங் மைதானம் அமைத்தல் | 57 |
| 95 | வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் | 57 |
| 96 | நீர்வரத்து வாய்க்கால்களின் கரைகளை பலப்படுத்தி இணைப்பு சாலைகள் அமைத்தல் | 58 |
| 97 | மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில் கூரை அமைத்தல் | 58 |
| 98 | மின்வாகனங்களுக்கு சார்ஜிங் மையம் அமைத்தல் | 58 |
| 99 | நம்ம கோவை செயலி முறையில் பணிகள் மேற்கொள்ளுதல் | 59 |
| **பாதாளசாக்கடைதிட்டம்** | | 62 |
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்- நஞ்சுண்டாபுரம் பகுதியில் விடுபட்ட பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கும் பணி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வெளியேற்றுவதற்கு புதிய குழாய் பதிக்கும் பணி | 62 |
| 2 | விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்க | 63 |
| 3 | பழைய பாதாள சாக்கடை திட்டத்தில் பதிக்கப்பட்ட குழாய்களை பராமரித்தல் | 63 |
| 4 | புதியதாக வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் | 63 |
| 5 | ஒண்டிப்புதூர் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு குழாய்கள் அமைக்கும் பணி | 64 |
| 6 | சின்னவேடம்பட்டி ஏரியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (STP) அமைத்தல் | 64 |
| 7 | SIDCO எஸ்டேட்டில் சுத்திகரிக்கப்பட்ட மறுபயன்பாட்டு நீர் ஆலை | 65 |
| **குடிநீர் விநியோகம்** | | 68 |
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளின் மனைப்பிரிவுகளில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வீட்டு இணைப்பு குழாய் மற்றும் பிரதான குழாய் பதித்தல் பணி | 68 |
| 2 | தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல் | 68 |
| 3 | சிறுவாணி அணையின் பராமரிப்பு பணிகள் | 69 |
| 4 | நீர் சேமிப்புத் தொட்டியினை மழைநீர் சேகரிப்பு தொட்டிகளாக அமைத்தல் | 69 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 5 | குடிநீர் விநியோக பணிகள் மேம்படுத்துதல் | 70 |
| **திடக்கழிவு மேலாண்மை திட்டம்** | | 71 |
| 1 | வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கண்காணிப்பு கட்டிடம் கட்டுதல் | 71 |
| 2 | தெருவிளக்குகள் மற்றும் சென்டர் மீடியன் அமைத்தல் | 71 |
| 3 | வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் உள்ள மண்சாலைகளை தார் சாலைகளாக மாற்றியமைத்தல் | 71 |
| 4 | கண்காணிப்பு கேமராக்கள், பாதுகாவலருக்கான செக்யூரிட்டி அறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைத்தல் | 71 |
| 5 | வெள்ளலூர் குப்பைக் கிடங்கினை பசுமை பகுதியாக மாற்றுதல் | 71 |
| 6 | குப்பைக் கிடங்கில் தீ விபத்து ஏற்படும் நேரங்களில் தங்கு தடையின்றி தண்ணீரை கொண்டு வர கூடுதலாக மின் மோட்டார்கள் அமைத்தல் பணி | 72 |
| 7 | குப்பைக்கிடங்கிலிருந்து மின் உற்பத்தி செய்தல் ( Waste to Energy) | 72 |
| 8 | MCC , MRF & Dry waste collection centre பராமரித்தல் பணி | 72 |
| 9 | இயற்கை எரிவாயு மையம் (Bio CNG) | 72 |
| 10 | Bio - Mining திட்டம் | 73 |
| 11 | KPI அமைப்பு மூலம் முதன்மை சேகரிப்புப் பணிகளை தனியார் மயமாக்குதல் | 73 |
| 12 | குப்பை மாற்று நிலையங்கள் | 75 |
| 13 | சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிக்கும் குட்டைகள் சீரமைத்தல் | 76 |
| **வாகனங்கள்** | | 76 |
| 1 | புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல் | 76 |
| **நகரமைப்புப்பிரிவு** | | 78 |
| 1 | பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வேலி அமைத்து பாதுகாத்தல் | 78 |
| 2 | திட்ட சாலைகள் | 78 |
| 3 | சாலை தீவுத்திடல்கள் | 79 |
| 4 | புவியியல் தகவல் மையம் (Geo Information System) மேம்பாடு | 79 |
| 5 | "S" வளைவு சாலை அபிவிருத்தி | 80 |
| 6 | கோயம்புத்தூர் மெட்ரோ ரயில் திட்டம் | 80 |
| 7 | சத்தியமங்கலம் சாலை விரிவாக்கம் | 81 |
| 8 | டிஜிட்டல் தொழில்நுட்ப கருவி மூலம் நிலஅளவை பணிகளை மேற்கொள்ளுதல் | 81 |
| 9 | நொய்யல் ஆறு அளவீடு செய்தல் | 81 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 10 | சங்கனூர் பள்ளம் அளவீடு செய்தல் | 82 |
| 11 | மணியகாரன்பாளையம் நீர்நிலை பகுதிகளை அளவீடு செய்தல் | 82 |
| 12 | சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.29-ல் அமையும் 40 அடி அகல திட்ட சாலையை அபிவிருத்தி செய்தல் | 82 |
| **மாமன்றப்பிரிவு** | | 83 |
| 1 | மாமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி வழங்குதல் | 83 |
| 2 | மாண்புமிகு மேயர் விருப்ப நிதி | 83 |
| **வருவாய்பிரிவு** | | 84 |
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி - புனரமைக்கப்பட்ட சந்தைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ஏலம் விடுவதன் மூலம் வருவாய் ஈட்டுதல். | 84 |
| **பொதுப்பிரிவு** | | 85 |
| 1 | மாநகராட்சி பணியாளர்களுக்கான பயிற்சி | 85 |

# ஒட்டுமொத்த நிதிநிலைமை

2025-25ம் நிதியாண்டில் வருவாய் வரவினம் மற்றும் மூலதன வரவினம் மொத்தம் ரூ. 4617.33 கோடி எனவும், வருவாய் செலவினம் மற்றும் மூலதன செலவினம் மொத்தம் ரூ.4757.16 கோடி எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 2025-26ம் நிதியாண்டில் நிகரப் பற்றாக்குறை ரூ.139.83 கோடி ஆகும்.

Rs. In Crore - ரூ. கோடியில்

| Details -விபரம் | Revenue Fund - பொது நிதி | Water Supply and Drainage Fund - குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி | Elementary Education Fund - ஆரம்பக் கல்வி நிதி | Total - மொத்தம் |
|---|---|---|---|---|
| Revenue Receipts - வருவாய் வரவினம் | 1,111.82 | 644.36 | 101.70 | 1,857.88 |
| Capital Receipts - மூலதன வரவினம் | 1,549.96 | 1,209.49 | - | 2,759.45 |
| **Total - மொத்தம்** | **2,661.78** | **1,853.85** | **101.70** | **4,617.33** |
| Revenue Expenditure - வருவாய் செலவினம் | 842.12 | 442.54 | 42.39 | 1,327.05 |
| Capital Expenditure - மூலதன செலவினம் | 1,968.49 | 1,404.17 | 57.45 | 3,430.11 |
| **Total - மொத்தம்** | **2,810.61** | **1,846.71** | **99.84** | **4,757.16** |
| **SURPLUS - உபரி / (DEFICIT) (பற்றாக்குறை)** | **(148.83)** | **7.14** | **1.86** | **(139.83)** |

## கல்விப் பிரிவு

### 1. மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வகங்கள் மேம்பாடு செய்தல்.

மாநகராட்சி 17 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 10 உயர்நிலைப் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு செய்முறைப்பயிற்சி வகுப்புகளை சிறப்பான முறையில் மேற்கொள்ள அறிவியல் ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும், தேவையான அறிவியல் உபகரணங்கள் வழுங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 2. மாநகராட்சி பள்ளிகளில் Public Address System அமைத்து தருதல்.

மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளிலும் தரமான உட்கட்டமைப்பு வசதிகள் வழுங்கப்பட்டுள்ளன. உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி, பள்ளிநலன் சார்ந்த அறிவிப்புகளை ஒரே நேரத்தில் அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும் அவரவர் வகுப்பறைகளிலேயே அறிந்துகொள்ளும் வகையில், தலைமை ஆசிரியர் அறையிலிருந்தே அறிவிக்கும் Public Address System அனைத்துப் பள்ளிகளிலும் அமைக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3. Smart class அமைத்து தருதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளில் உலகத்தரம் வாய்ந்த கல்வியினை மாணவர்களுக்கு வழுங்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய கற்றல், கற்பித்தல் முறையினை பயன்படுத்தி வகுப்புகள் நடத்த, மண்டலத்திற்கு ஒரு பள்ளி வீதம் 5 மண்டலங்களில் SmartClass அமைக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் தலா 1 மண்டலத்திற்கு ரூ.100 லட்சம் வீதம் 5 மண்டலங்களுக்கு ரூ.500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. மாநகராட்சி பள்ளி 10 மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 100 % தேர்ச்சி வழங்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக கல்விச் சுற்றுலா அழைத்து செல்லுதல்**

மாநகராட்சி அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகளில் தாம் பயிற்றுவிக்கும் பாடப்பிரிவில் 100% தேர்ச்சி வழங்கும் ஆசிரியர்களை விடுமுறை நாட்களில் கல்விச் சுற்றுலாவாக நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கு (ஐ.ஐ.டி. சென்னை. ஐ.ஐ.எம். பெங்களூர் மற்றும் டெல்லி பல்கலைக்கழகம்) அழைத்துச் செல்லப்படுவர். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**5. கல்விசார் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் விரிவுபடுத்துதல்**

மாநகராட்சி 64 மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2024-25-ம் கல்வியாண்டில் பள்ளி மாணவ மாணவியருக்கு கல்விசார் மற்றும் கல்விசாரா செயல்பாடுகள் பயிற்சியாளர்களை நியமித்து சிறப்புற செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் இத்திட்டம் 83 ஆரம்பப் பள்ளிகளிலும் மற்றும் 64 மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும். இச்செயல்பாடுகளுக்கு தேவைப்படும் யோகாமேட் (Yoga Mat), சிலம்பம்குச்சி (Silambam stick)போன்ற உபகரணங்களும் வழங்கப்படும். கூடுதலாக நீச்சல், ஸ்கேட்டிங், ஜிம்னாஸ்டிக், டேக்வாண்டோ மற்றும் ஜூடா போன்ற பயிற்சிகள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.260 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. பள்ளி மாணவர்களுக்கான தொழிற்சாலைகளை பார்வையிடும் திட்டம் (Industrial Visit) மேற்கொள்ளுதல்**

மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு கல்வியில் தரமான பயிற்சிகள் வழங்குவதுடன், பொருட்கள் உற்பத்தி சார்ந்த அறிவினை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் "**நான்முதல்வன்**" திட்டத்தின் ஒரு பகுதியாக தொழிற்சாலைகளுக்கு அழைத்து செல்ல

நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கென உளவியல் ஆலோசனை வழங்குதல்**

வளர் இளம் பருவத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்படுத்தும் விதமாகவும் அவர்கள் கற்றல் திறனை மேம்படுத்தும் விதமாகவும், தேவைப்படும் பள்ளி மாணவ, மாணவியருக்கு இதற்கென பயிற்சி பெற்ற உளவியல் ஆலோசகர்கள் கொண்டு உளவியல் ஆலோசனைகள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. மாநகராட்சி பள்ளிகளில் 12-ம் வகுப்பு பயின்று ஐ.ஐ.டி., என்.ஐ.டி., மற்றும் மருத்துவ படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கான கல்வி கட்டணம் (Tuition fees) செலுத்துதல் மற்றும் நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வழங்குதல்.**

மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு பயின்று மேற்கல்விக்கென ஐ.ஐ.டி., என்.ஐ.டி., போன்ற தொழில்நுட்பகல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவ கல்வியில் சேர்க்கை பெறும் மாணவர்களுக்கு அவர்களது முதலாமாண்டு கல்விக்கட்டணம் (Tuition fees) மட்டும், ஒரு மாணவருக்கு ரூ.25,000-க்கு மிகாமல் மாநகராட்சி நிதியிலிருந்து செலுத்தப்படும். கூடுதலாக நீட் போன்ற நுழைவுத் தேர்வுக்கான பயிற்சியும் மாணவர்களுக்கு வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம்வகுப்பு பாடங்களில் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெரும் மாணவ, மாணவியருக்கு ஊக்கத்தொகை மற்றும் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெறச் செய்யும் வகுப்பாசிரியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்.**

மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பயின்றுவரும் மாணவ, மாணவியர்களின் பள்ளி இறுதி அரசு பொதுத்தேர்வில் குறைந்த பட்சம் ஒரு பாடத்தில் 100 விழுக்காடு மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு ரூ.10,000 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மாநகராட்சி பள்ளிகளில் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெறச்செய்யும் வகுப்பு ஆசிரியருக்கு, ஒரு ஆசிரியருக்கு ரூ.10,000 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**10. மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர்களுக்கான கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance) நடத்துதல்**

மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவியர் 12-ம் வகுப்பிற்கு பின்னர் மேற்கல்வி சார்ந்த படிப்புகளை தேர்வு செய்யும் பொருட்டும் அவர்தம் பெற்றோர் அறிந்து கொள்ளும் வகையிலும் கல்வி வழிகாட்டி நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் தலைசிறந்த கல்வியியல் வல்லுநர்களை கொண்டு நடத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**11. அறிவியல் கண்காட்சி நடத்துதல்**

மாநகராட்சி பள்ளி மாணவர்கள் அறிவியல் அறிவினை வெளிக் கொணரவும். அறிவியல் சார்ந்த கண்டுபிடிப்புகளுக்கு மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும்,

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் அறிவியல் படைப்புகளை (Science Projects) காட்சிப்படுத்தும் வகையில், அறிவியல் கண்காட்சி மாநகராட்சி பள்ளிகள் அளவில் நடத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 12. இருக்கையுடன் கூடிய மேசைகள் (Desk, Bench) வழங்குதல்

மாநகராட்சி ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் முதல் பன்னிரெண்டாம் வகுப்புகள் வரை பயிலும் மாணவர்களுக்கு தேவைப்படும் எண்ணிக்கையிலான இருக்கையுடன் கூடிய மேசைகள் (Desk, Bench) வழங்கப்படும். இந்நிதியாண்டில் ரூ. 230 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும் வரும் கல்வி ஆண்டில் (2025-26) 50 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் துவக்கப்பட உள்ள எல்கேஜி மற்றும் யுகேஜி வகுப்புகளுக்கென மேசை மற்றும் இருக்கைகள் வழங்கிட இந்நிதியாண்டில் ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 13. மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்குதல்.

மாநகராட்சி ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில்பயிலும் மாணவ, மாணவியருக்கு குடிநீர் வசதி செய்து தர குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் கொள் முதல் செய்து வழங்கும் வகையில் 148 பள்ளிகளுக்கு இந்நிதியாண்டில் ரூ.150 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 14. மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும் வகுப்பறைகள் கட்டவும் /கூடுதல் வகுப்பறைகள் மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளுதல்.

கோவை மாநகராட்சி மேற்குமண்டலம் வார்டு எண் 39, லிங்கனூர் பகுதியில் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் தற்போது பழைய பள்ளிக் கட்டிடத்தினை இடித்து விட்டு புதியதாக நான்கு அறைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும், இந்த

பள்ளியில் வடபுறம் சுமார் 40 ஆண்டுகள் பழமையான பள்ளிகட்டிடம் இயங்கி வருகிறது. இது மிகவும் பழுதடைந்து அங்கங்கு சுவர்கள் விரிசல் விட்டும், கூரையின் ஓடுகள் அடிக்கடி பெயர்ந்து விழும் நிலையிலும் அபாயகரமாக உள்ளது. எனவே இந்த கட்டிடத்தையும் இடித்து விட்டு புதிதாக பள்ளிகட்டிடம் கட்டுவது அவசியமாகிறது. மேலும், தற்போதுள்ள வகுப்பறைகள், 105 மாணவர்களுக்கு போதுமானதாக இல்லை. மேலும், வரும் கல்வி ஆண்டில் புதியதாக ஆங்கில வழிகல்வி சேர்க்கையும் நடைபெற உள்ளது. அதற்கும் கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. எனவே இந்த பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக நான்கு அறைகள் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், மாநகராட்சி அனைத்து பள்ளிகளிலும் கூடுதலாக தேவைப்படும் வகுப்பறைகள் கட்டவும் மற்றும் தேவைப்படும் கட்டிடங்களில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் இந்நிதியாண்டில் ரூ.2000 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 15. மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும் கழிப்பறை வசதி ஏற்படுத்துதல்.

மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்படுத்தும் கழிப்பறைகள் கட்டவும் மற்றும் தேவைப்படும் இடங்களில் மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் இந்நிதியாண்டில் ரூ.500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 16. மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கற்றல் கற்பித்தல் பயிற்சி கையேடு (Minimum Learning Material), வரைகட்டத்தாள் மற்றும் வரைபடத்தாள் (Graph & Map) வழங்குதல் .

மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கற்றல், கற்பித்தல் திறனை ஊக்குவிக்கும் வகையில் கற்றல், கற்பித்தல் பயிற்சி கையேடு

(Minimum Learning Material), வரைகட்டத்தாள் மற்றும் வரைபடத்தாள் (Graph & Map) வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**17. மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாலை சிற்றுண்டி வழங்குதல்.**

மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12-ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் வகையில் மாலை நேர சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வகுப்புகளின்போது மாணவர்களுக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகள் துவங்கும் முன் மாணவர்களின் சோர்வுநிலை தவிர்க்க சிற்றுண்டி வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**18. விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்**

மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மண்டல வாரியாக நடத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. அங்கன்வாடி மையங்கள் புதுப்பித்தல்**

மாநகராட்சி பள்ளிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் செயல்படும் 20 அங்கன்வாடி மையங்களை புதுப்பிக்க இந்நிதியாண்டில் ரூ.300 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**20. மாநகராட்சி அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ( Interactive learning and sustainability) வகுப்புகள் வழங்குதல்.**

மாநகராட்சி அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ஆற்றல் மிக்க மற்றும் ஈடுபாட்டுடன் கூடிய கற்றல் அனுபவத்தை ஏற்படுத்தும் விதமாக (Interactive learning and Sustainability) வகுப்புகள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**21. கோயம்புத்தூர் மாநகராட்சி தூய்மை பாரத திட்டத்தின்கீழ்(SWACHH BHARAT MISSION) அனைத்துப் பள்ளிகளிலும் குப்பைத் தொட்டிகள் வைத்தல்.**

மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளிலும் தூய்மை பாரத திட்டத்தின் கீழ் பள்ளி வளாகங்களில் குப்பைத் தொட்டிகள் வைத்து சுற்றுப்புறத்தின் சுத்தத்தை பேணிக்காக்க இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**22. மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளுக்கும், லேப்டாப் (Laptop) / கம்ப்யூட்டர், யு.பி.எஸ். (Computer, UPS), இன்வெர்ட்டர் (Invertor) பேட்டரி வழங்குதல்.**

மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் கணினி பயில்வதற்கு ஏதுவாக லேப்டாப் / கம்ப்யூட்டர், யூபிஎஸ், இன்வெர்ட்டர் பேட்டரி வசதி செய்து தரப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**23. பள்ளிக்கு தொடர்ந்து வருகை புரியாத மாணவ, மாணவியர்களுக்கு அவர்தம் பெற்றோர்களுடன் ஆலோசனைகள் வழங்குதல்.**

பள்ளிக்கு தொடர்ந்து வருகை புரியாத மாணவ, மாணவியர்களுக்கு அவர்தம் பெற்றோர்களுடன் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஆலோசனை வழங்க தன்னார்வலர்கள் மற்றும் தனியார் நிறுவன அமைப்பினர்களை கொண்டு மாணவர்கள் பள்ளிக்கு தொடர்ந்து வருகை புரிவதை உறுதிசெய்ய ஆலோசனைகள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**24. மாநகராட்சி பள்ளிகளில் 95 விழுக்காடுக்கு மேல் தேர்ச்சிபெறும் பள்ளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்.**

மாநகராட்சி பள்ளிகளில் 95 விழுக்காடுக்கு மேல் தேர்ச்சிபெறும் பள்ளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**25. மாநகராட்சி பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த நாளிதழ்கள் வழங்குதல்.**

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் வாசிப்புதிறனை மேம்படுத்தவும், பொது அறிவை வளர்க்கும் விதமாகவும் மாநகராட்சி பள்ளிகளில் பட்டம், தினமலர், தினகரன், தினமணி மற்றும் இந்து நாளிதழ்கள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**26. விளையாட்டு மைதானங்கள் உட்பட விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.**

மாநகராட்சி பள்ளிகளில் 100க்கும் கூடுதலாக மாணவர் எண்ணிக்கை உள்ள 5 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு விளையாட்டு மைதானங்கள் உட்பட அனைத்து விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் மாநகராட்சி அனைத்துப் பள்ளிகளிலும் மாணவ, மாணவியரிடையே விளையாட்டில் ஆர்வத்தையும், திறனையும் ஊக்குவிக்கும் வகையில் அனைத்துப் பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**27. மிதிவண்டிகள் நிறுத்த மேற்கூரையுடன் கூடிய இடம் அமைத்து தருதல்.**

மாநகராட்சி 10 மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் மிதிவண்டிகள் நிறுத்த மேற்கூரையுடன் கூடிய இடம் அமைத்து தரப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 28. கூரையுடன் கூடிய உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல்

மாநகராட்சி பள்ளிகளில் விளையாட்டிடம் இல்லாத பள்ளிகளில் வகுப்பறைகளின் மேற்பகுதியில் கூரையுடன் கூடிய உள்விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 29. தட்டச்சு பயிற்சி அளித்தல்

மாநகராட்சி 10 மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் தட்டச்சு திறனை வளர்க்கும் வகையில் பள்ளிகளுக்கு தட்டச்சு இயந்திரங்கள் வழங்கப்படும். தட்டச்சு பயிற்சிகள் வழங்க தனியார் பயிற்றுநர்கள் நியமிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 30. வினாடி வினா போட்டிகள் நடத்துதல்

மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியரிடையே பாட அறிவினையும், பொதுஅறிவினையும், நினைவாற்றலையும் மேம்படுத்தும் வகையில் மாநகராட்சி பள்ளிகளுக்கிடையேயான வினாடி வினா போட்டிகள் நடத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 31. கிரிக்கெட் பயிற்சி அளித்தல்

மாநகராட்சி 5 மேல்நிலைப் பள்ளிகளில் கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமும், திறனும் உடைய மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு கிரிக்கெட் பயிற்சிகள் வழங்கப்படும். தேவையான கிரிக்கெட் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 32. பள்ளிகளுக்கு இசைக்குழு பயிற்சி மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

மாநகராட்சி 10 பள்ளிகளில், பள்ளி இசைக்குழு (Band Troupe) அமைக்கப்படும். தேவையான உபகரணங்கள், சீருடைகள் மற்றும் காலணிகள் வழங்கப்படும். பயிற்சிகள் வழங்க பயிற்றுனர் நியமிக்கப்படுவர். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 33. எரியூட்டும் இயந்திரம் (Incinerator) வழங்குதல்

மாநகராட்சி 64 மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவியர் நலன்கருதியும், சுகாதாரத்தை பேணவும் மாணவியர் எண்ணிக்கைப்படி தேவைப்படும் 71 எண்ணிக்கையிலான எரியூட்டும் இயந்திரங்கள்(Incinerator) வழங்கப்படும். இதற்கென ஆண்டு பராமரிப்பு கட்டணம் உட்பட செலவு மேற்கொள்ளவும், இந்நிதியாண்டில் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 34. எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் துவங்குதல்

மாநகராட்சி 19 நடுநிலைப் பள்ளிகளில் எல்.கே.ஜி, யு.கே.ஜி வகுப்புகள் செயல்பட்டு வருகின்றன. அங்கன்வாடி மையங்கள் செயல்படும் மாநகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில், அதிக மாணவர் எண்ணிக்கை உள்ள 50 பள்ளிகளில், எல்.கே.ஜி மற்றும் யு.கே.ஜி வகுப்புகள் துவக்கப்படும். இவ்வகுப்புகளுக்கு தேவைப்படும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் நியமிக்கப்படுவர். இவர்களுக்கு ஊதியம் வழங்கவும், தேவையான கற்பித்தல் பாடகுறிப்பேடுகள் வழங்கவும், தேவைப்படும் பள்ளிகளில் இதற்கென வகுப்பறைகள் கட்டவும், இந்நிதியாண்டில் ரூ.2000 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 35. கல்விப் பிரிவு புனரமைத்தல்

மாநகராட்சி கல்விப் பிரிவு உள்கட்டமைப்பு (Infrastructure) புனரமைக்கவும், UPS உடன் 10 கணினிகள் மற்றும் 3 பிரிண்டர்களும் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 36. VR ஆய்வகம் உருவாக்குதல்

மாநகராட்சி 5 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் படைப்பாற்றலை ஊக்குவிக்கவும், தனித்திறனை மேம்படுத்தவும், Virtual Reality ஆய்வகங்கள் அமைக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.350 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 37. பள்ளி மேலாண்மைக் குழு மூலம் ஆசிரியர்கள் நியமித்தல்.

மாநகராட்சி பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களில் காலிப்பணியிடங்கள் ஏற்படும் போது, மாணவர் நலன்கருதி, மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் தேவைப்படும் காலிப்பணியிடங்களில், நிரந்தர ஆசிரியர்கள் நியமிக்கப்படும் வரை சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு வெளிமுகமை (Out Sourcing) மூலம் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.188 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 38. மாநகராட்சி பள்ளிகளில் CCTV அமைத்தல்

மாநகராட்சி பள்ளிகளில் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கும் 20 மாநகராட்சி பள்ளிகளில் சிசிடிவி பொருத்தப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 39. மாநகராட்சி பள்ளிகளில் அரங்கம் (Auditorium) அமைத்தல்.

போதுமான இடவசதி உள்ள மாநகராட்சி பள்ளிகளில் பள்ளி பயன்பாட்டிற்கென அரங்கம் அமைத்து தரப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 40. மாநகராட்சி பள்ளிகளில் 8-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டுதல் (Mentoring) வழங்குதல்.

மாநகராட்சி பள்ளிகளில் 8-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பொருளாதார ரீதியாக பின்தங்கிய பின்னனியில் உள்ள மாணவர்களுக்கு அனுபவச் செயல்முறையின்படி வழிகாட்டுவதன் மூலம் வாழ்க்கையில் ஒரு வலுவான நோக்கம், தெளிவு மற்றும் திசையை உருவாக்க உதவும் வகையில் அவர்களின் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை எடுத்துரைத்து, மாணவர்கள் தங்கள் திறனை உணர்ந்து, ஒரு அர்த்தமுள்ள பாதையை முன்னோக்கி அமைக்க வழிகாட்டுதல் (Mentoring) வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.600 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 41. மாணவர் படைப்புகள் புத்தகமாக வெளியிடுதல்.

மாநகராட்சி பள்ளி மாணவர்களின் படைப்புத் திறனை வெளிக்கொணரும் வகையில் அவர்களது கட்டுரைகள், ஓவியங்கள் மற்றும் இதர படைப்புகள் புத்தகமாக ஆண்டு தோறும் வெளியிடப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 42. மாணவர் தொடர் கல்வித் திட்டம் கண்காணித்தல்.

மேல்நிலைக் கல்வி முடித்த மாணவர்கள், தேர்ச்சி பெறாத மாணவர்கள் மற்றும் இடைநின்றவர்கள் தொடர்ந்து உயர்கல்வியில் சேர்ந்து பயில்வதை கண்காணித்து உறுதி செய்யப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 43. சதுரங்க பயிற்சி வழங்குதல்.

மாநகராட்சி பள்ளி மாணவர்களில் சதுரங்க பயிற்சியில் ஆர்வமும் திறனும் உள்ள மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சதுரங்க பயிற்சி வழங்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 44. அழைப்பு மையம் (Call Centre) அமைத்தல்.

மாநகராட்சிப் பள்ளி மாணவர்களிடையேயான நடத்தை நடவடிக்கைகளை மேம்படுத்தும் விதமாக ஒரு அழைப்பு மையம் (Call Centre) அமைக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 45. மாநகராட்சி பள்ளி தரம் உயர்த்துதல்

மாணவர் எண்ணிக்கை மற்றும் தேவைகளின் அடிப்படையில், மாநகராட்சிப் பள்ளிகள் நடுத்தர நிலையிலிருந்து உயர்நிலைக்கு மேம்படுத்தப்படும். மேலும் பள்ளிகளிடமிருந்து பெறப்பட்ட திட்டங்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் கூடுதல் பாடப்பிரிவுகள் அங்கீகரிக்கப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## பொது சுகாதாரப் பிரிவு

### 1. சீதாலட்சுமி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதிரி மகப்பேறு சிகிச்சை மையம் (Model Primary Maternity Care Center)

கோயம்புத்தூர் மாநகராட்சியில் வருடத்திற்கு 24,000 முதல் 25,000 வரை கர்ப்பிணி தாய்மார்கள் குழந்தைகளை பிரசவிக்கிறார்கள். கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 32 ஆரம்ப சுகாதார மைங்களிலும் ஒரு மருத்துவர் பணியிடம் மட்டுமே உள்ளது. இரவு நேரங்களில் ஒரு செவிலியர் மட்டுமே உள்ளதாலும், மேலும் தற்போதைய காலங்களில் சிக்கல் நிறைந்த பிரசவங்கள் (High Risk) அதிகரித்து வருவதாலும், மாநகராட்சி ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுகபிரசவங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. எனவே ஏழை எளிய மக்கள் பிரசவ சிகிச்சைகளுக்கு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை மட்டுமே நாடவேண்டியுள்ளது. ஆகவே மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள சீதாலட்சுமி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் 24 மணிநேரமும் பிரசவம் உள்ளிட்ட அனைத்து மகப்பேறு சேவைகளும் மக்களுக்கு கிடைக்க ஏதுவாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் 3 மகப்பேறு சிறப்பு மருத்துவர்களுடன் கூடுதலாக இம்மையத்திற்கு என பிரத்தியேகமாக 5 மருத்துவர்கள், 2 குழந்தைகள் சிறப்பு மருத்துவர்கள் (On call / அழைப்பின்பேரில்), 10 செவிலியர்கள், 3 ஆய்வக நுட்புநர்கள், 6 மருத்துவ பணியாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களை நியமித்திடவும் மற்றும் உபகரணங்கள், படுக்கைகள், மருந்துபொருட்கள், வேதிப்பொருட்கள், அவசர தொலைபேசி வசதிகள் போன்றவை ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு, மாநகர பகுதியில் வசிக்கும் ஏழை எளிய மக்கள் பயன்படும் வகையில் மாதிரி மகப்பேறு சிகிச்சை மையம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.

### 2. தாய்சேய் நல கண்காணிப்பு அழைப்பு மையம் (Maternal Child Health Call Centre)

இம்மாநகராட்சியின் கீழ் 10 பேர் பணிபுரியக் கூடிய வகையில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக தாய்சேய் நலம் கால்சென்டர் அமைக்கப்படும். இதன் மூலம் மாநகராட்சி பகுதியில் வசிக்கும் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் தாய்-சேய் இறப்புகள் குறைக்கப்படும். மேலும், தனியார் மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பரிசோதனை பெற்று வரும் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பிரசவிக்கும் தாய்மார்களை கண்காணிக்கவும், பிறந்த குழந்தைகளுக்கு தேவையான தடுப்பூசிகள் போடும் நாள் முன்கூட்டி நினைவூட்டுவது மற்றும் தடையற்ற தடுப்பூசிகள் கிடைப்பதற்கு வழிவகுக்கப்படும்.

மேலும், கால்சென்டரில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கான ஒப்பந்த ஊதியம், உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### 3. டயாலிசிஸ் மையம் (Dialysis Centre)

கோயம்புத்தூர் மாநகராட்சியின் சீதாலட்சுமி நகர்புற ஆரம்ப சுகாதார வளாகத்தில் 3000 சதுரடி கட்டிடத்தில் Rotary Coimbatore Ikon Trust மற்றும் Tamilnadu Kidney Research Foundation இணைந்து சிறுநீரக டயாலிசிஸ் மையம் செயல்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சியிலிருந்து கட்டிடம் மற்றும் மின்சார கட்டண உத்தேச செலவினத் தொகை ரூ.62 இலட்சம் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**4. ஏழு நகர்புற சமுதாய சுகாதார நிலையங்களில் பொதுமக்களுக்கு இலவசமாக பல்சிகிச்சை வழங்குதல்.**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சீதாலட்சுமி நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனையுடன் இணைந்து வாரத்தில் இரண்டு நாட்களுக்கு பொதுமக்களுக்கு இலவசமாக பல்மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. இந்த வசதி மாநகராட்சி முழுவதுமாக உள்ள மக்களுக்கு சென்றடையும் வகையில் ஸ்ரீ இராமகிருஷ்ணா மருத்துவமனையுடன் இணைந்து ரூ.7 இலட்சத்தில் (வேதிப்பொருட்கள் மற்றும் மருந்து மாத்திரைகள்) அனைத்து சமுதாய சுகாதார மையங்களிலும் (பீளமேடு, சிங்காநல்லூர், பாரதிபார்க்ரோடு, செல்வபுரம், சிடிஎம்ஹோம், துடியலூர்) வாரத்தில் இரண்டு நாட்களுக்கு பொதுமக்களுக்கு பல்மருத்துவ சிகிச்சை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. மூன்று பொது சுகாதார ஆய்வகங்களுக்கு பணியாளர்களை நியமித்தல்**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட போத்தனூர், பீளமேடு மற்றும் உப்பிலிபாளையம் ஆகிய பகுதிகளில் பொது சுகாதார ஆய்வகங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப் பட்டுள்ளது. இந்த ஆய்வகங்களுக்கு அரசு மூலம் பணியாளர்கள் நியமனம் செய்வது காலதாமதமாவதால் மக்கள் பயன்பாட்டிற்கு முழுமையாக கொண்டு வர இயலவில்லை. எனவே, பொதுநலன் கருதி ஆய்வகங்களுக்கு தலா ஒரு நுண்ணுயிரியாளர், ஒரு ஆய்வக நுட்புநர், ஒரு உதவியாளர் நியமனம் மற்றும் ஆய்வக வேதிப்பொருட்கள் கொள்முதல் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு டெங்கு, லெப்ரோஸ்பைரோஸிஸ், ஸ்க்ரப்டைபஸ், சிக்கன்குனியா, ஹெப்படைடிஸ், கல்லீரல் (LFT), சிறுநீரகம் (RFT), கொலஸ்டிரால் (Lipid profile) உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**6. நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (32 நிலையங்கள்) மருத்துவ உபகரணங்கள் வழங்குதல்**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் 32 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் செல்கவுன்டர்கள், செமிஆட்டோ அனலைசர்கள், மகப்பேறு இரத்தக்கசிவு காரணமாக ஏற்படும் தாய் இறப்புகளைக் குறைப்பதற்கான நியுமேடிக் அல்லாத அதிர்ச்சி எதிர்ப்பு ஆடை (NASG), ஆய்வகங்களுக்கு தேவையான வேதிப்பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ உபகரண கருவிகள், அலுவலக தளவாடப் பொருட்கள், ஆய்வகப் பரிசோதனை கருவிகள், ஆய்வக வேதிப்பொருட்கள் மற்றும் I.L.R கருவிகள் தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**7. இருபது நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேசிய தரஉறுதி, தரநிலை (NQAS) மதிப்பீடு செய்ய நிதி ஒதுக்கீடு செய்தல்**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 32 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 20 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேசிய தரஉறுதி, தரநிலை மதிப்பீடு செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதை தொடர்ந்து, தேசிய தரமதிப்பீட்டு பணிகளுக்கு நிலையம் ஒன்றிற்கு ரூ.2 இலட்சம் வீதம் 20 நிலையங்களுக்கு ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**8. சுகாதார நிலைய கட்டுமான பணிகள் (3 புதிய கட்டிடம் மற்றும் 6 கூடுதல் கட்டிடம்)**

தேசிய சுகாதார நல குழுமம் கீழ் (NUHM-Fund) ஏற்கனவே செயல்பட்டு வரும் நஞ்சுண்டாபுரம், கே.கே.புதூர், சீரநாயக்கன்பாளையம் ஆகிய நிலையங்களுக்கு புதிய இடம் தேர்வு செய்யப்பட்டு நிலையம் ஒன்றிற்கு ரூ.157 இலட்சம் மதிப்பீட்டில் அரசிடம் நிதி பெற்று கட்டிடம் கட்டப்படும். மேலும் சௌரிபாளையம், வெள்ளக்கிணறு, கல்வீரம்பாளையம்,

செல்வபுரம், இராஜவீதி மற்றும் குறிச்சி ஆகிய நிலையங்களுக்கு ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 9. ஐந்து புதிய நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வேலாண்டிபாளையம், சரவணம்பட்டி கிருஷ்ணா அவென்யூ, நேரு நகர் மேற்கு மற்றும் மேட்டூர் பகுதிகளில் மக்கள்தொகை அடிப்படையில் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட பின் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 10. வீடில்லா நாய்களுக்கு ரேபிஸ் நோய் தடுப்பூசி செலுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் தோராயமாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வீடில்லா நாய்கள் உள்ளன. மேற்கண்ட நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக மாநகராட்சியின் நான்கு இடங்களில் கருத்தடை சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. மேலும் நாய்கள் கடிப்பதால் ஏற்படும் ரேபிஸ் நோயை தடுப்பதற்காக மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் கால்நடை மருத்துவர்கள் மற்றும் நாய் பிடிப்பாளர்களை கொண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உள்ள தெருநாய்களுக்கு ஒரு வருடத்திற்கு ஒரு முறை தடுப்பூசி செய்வதற்குண்டான நடவடிக்கைகளை Out Sourcing முறையில் கால்நடை மருத்துவர்கள் நியமனம் மற்றும் தடுப்பூசிகளை ரூ.50 இலட்சம் உத்தேசமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 11. பொது சுகாதாரப் பிரிவிற்கு கணினி உள்ளிட்ட தளவாடப் பொருட்கள் வழங்குவது

மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் செயல்பட்டு வரும் பொது சுகாதாரப்பிரிவிற்கு பயன்படுத்தப்படும் கணினிகள், பிரிண்டர்கள், அலுவலகப் பயன்பாட்டு தளவாடப் பொருட்கள், யுபிஎஸ் மற்றும் ஜெராக்ஸ் (ம) ஸ்கேனர் வசதி கொண்ட பிரிண்டர் (பெரியது) உள்ளிட்ட

தளவாடப் பொருட்கள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பொது சுகாதாரப்பிரிவிற்கு கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

32 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான தலா ஒன்று என்ற வீதத்தில் கணினி, பிரிண்டர் ஆகியவை ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 12. வார்டு எண்.83 பந்தைய சாலை சுகாதார அலுவலகம் புனரமைத்தல்

தற்போதைய நிலையில் செயல்பாட்டில் உள்ள வார்டு எண்.83ன் சுகாதார வார்டு அலுவலக கட்டிடம் சேதமடைந்துள்ளதால், ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## 13. சுகாதார வார்டு அலுவலகங்களுக்கு தானியங்கி குடிநீர் இயந்திரம் கொள்முதல் செய்தல்

மாநகரில் உள்ள அனைத்து சுகாதார வார்டு அலுவலகங்களிலும் தானியங்கி குடிநீர் இயந்திரம் நிறுவ ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

## பொறியியல் பிரிவு

### 1. நமக்கு நாமே திட்டம் (NNT)

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 83 மாநகராட்சி பள்ளிகள், 45 நகர்புற நல்வாழ்வு மையங்கள், மாநகராட்சியின் 5 மண்டலங்கள் மற்றும் பிரதான அலுவலத்தில் (MLN) டிஜிட்டல் ஆப்டிகல் நெட்வொர்க் தளம் மற்றும் உள்கட்டமைப்பு பணிக்கு அரசு பங்களிப்பு 1.27 கோடி மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு ரூ.2.58 கோடி மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.3.85 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 60 சிக்னல்கள், 716 முக்கிய பகுதிகள் மற்றும் கோயம்புத்தூர் மாநகர காவல்துறை அலுவலகங்களில் டிஜிட்டல் ஆப்டிகல் நெட்வொர்க் தளம் மற்றும் உள்கட்டமைப்பு பணி அரசு பங்களிப்பு ரூ. 2.22 கோடி மற்றும் பொதுமக்கள் பங்களிப்பு ரூ.4.53 கோடி மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.6.75 கோடி.

எனவே மேற்காண் இரண்டு பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மொத்தம் ரூ.10.60 கோடிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.19731/2024/பி2 நாள் 17.03.2025-ன்படி 2024 - 25 ஆண்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 2. A. சாலை மேம்பாட்டு பணிகள் முதற்கட்டம்

a. தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் TURIP 2025-26 திட்டத்தின்கீழ் ரூ.31.72 கோடி மொத்தமாக 79.09 கி.மீ நீளத்திற்கு 578 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

b. மாநில நிதிக்குழு சிறப்பு நிதி திட்டம் SFC devolution Fund 2024-25 திட்டத்தின்கீழ் ரூ.20.51 கோடி மதிப்பீட்டில் மண்சாலை 54.81 கி.மீ நீளத்திற்கு 366 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உள்ளூர் திட்டக்குழும நிதி (LPA Fund) 25- 26 திட்டத்தின் கீழ் ரூ.40.03 கோடி மதிப்பீட்டில் 101.49 கி.மீ நீளத்திற்கு 624 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் மற்றும் பொதுநிதியின் கீழ் ரூ.10.31 கோடி மதிப்பீட்டில் 26.66 கி.மீ நீளத்திற்கு 201 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

### B. சாலை மேம்பாட்டு பணிகள் இரண்டாம் கட்டம்

இரண்டாம் கட்டமாக ரூ.126.83 கோடி மதிப்பீட்டில் 279.99 கி.மீ நீளத்திற்கு 2061 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் இந்நிதியாண்டில் அரசு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும்.

### C. மூன்றாம் கட்டமாக சாலைப் பணிகள்

பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வடிகால் பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகளில், பணிகள் மேற்கொள்ள மூன்றாம் கட்டமாக ரூ.250.08 கோடி மதிப்பீட்டில் 572.94 கி.மீ நீளத்திற்கு 4277 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் இந்நிதியாண்டில் எடுக்கப்பட்டு அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 3. கிராஸ்கட் சாலை ஸ்கைவாக்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் முக்கிய சாலைகளில் ஒன்றான காந்திபுரம் நஞ்சப்பாசாலை, கிராஸ்கட் சாலை சந்திப்பில் சாதாரண நாட்களை விட முக்கியமான பண்டிகை நாட்களில் பொதுமக்கள் சென்று வர மிகவும் சிரமமாக உள்ளது. எனவே கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த ஸ்கைவாக் ரூ.8 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 4. K.G. தியேட்டர் சாலையில் வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் மாநகரின் மையப்பகுதியாக விளங்கும் K.G. தியேட்டர் சாலையில் எழில்மிகு பூங்காக்கள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் நடைபயிற்சி மேற்கொள்ளும் பகுதியாக உள்ளதால், வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக வாகன நிறுத்துமிடம் அமைக்க ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 5. உக்கடம் பேருந்து நிலையம் மறுசீரமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட உக்கடம் பகுதியில் தற்போதுள்ள பேருந்து நிலையத்தை நகரின் மையப்பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களை குறைக்கும் பொருட்டு பொள்ளாச்சி, பழனி. உடுமலைப்பேட்டை மற்றும் பாலக்காடு வழியாக கேரள மாநிலத்திற்கு இயக்கப்படும் பேருந்துகள் எண்ணிக்கையின் அடிப்படையில் பொது மக்களின் நலன் மற்றும் வசதிகேற்றவாறு நகர மற்றும் புறநகர் பேருந்து முனையங்கள் என அனைத்து நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பேருந்து முனையம் சுமார் 3.00 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.21.55 கோடிகள் மதிப்பீட்டில் அரசு நிதியுதவியுடன் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து முனையத்தில் கீழ்கண்ட உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படவுள்ளது.

#### முனையம் 1 மற்றும் முனையம் 2 ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்த விபரம்

1. மதிப்பீட்டுத் தொகை : ரூ.21.55 கோடி
2. மொத்தப் பரப்பு : 6.5 ஏக்கர்
3. மொத்தமாக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை : 1100 (Approximate)

4. மொத்த நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் : 32 எண்ணிக்கை

5. மொத்த இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் : 100 எண்ணிக்கை

**பேருந்து முனையம் 1 (மேற்கு புறம்) -ல் உத்தேசிக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்புகள்**

| | | |
|---|---|---|
| 1. | மதிப்பீட்டுத் தொகை | : ரூ.11.10 கோடிகள் |
| 2. | பரப்பு | : (13250 ச.மீ) |
| 3. | பேருந்து நிறுத்துமிடம் | : 28 எண்ணிக்கை |
| 4. | வணிக வளாகம் | : 1 எண்ணிக்கை (556.93 ச.மீ) |
| 5. | கடைகள் (202 ச.அடி) | : 7எண்ணிக்கைகள்(450.82 ச.மீ) |
| 6. | பெட்டிகடைகள் | : 10 எண்ணிக்கைகள் (575.8 ச.மீ) |
| 7. | கழிப்பறைகள் | : 1 எண்ணிக்கை (116.00 ச.மீ) |
| 8. | பயணிகளின் ஓய்வுதளம் | : 1 எண்ணிக்கை (278.00 ச.மீ) |
| 9. | உணவகம் | : 2 எண்ணிக்கை (154.00 ச.மீ) |
| 10. | பயணசீட்டு முன்பதிவு அறை | : 1 எண்ணிக்கை (20.00 ச.மீ) |
| 11. | கண்காணிப்பு அறை | : 1 எண்ணிக்கை (20.00 ச.மீ) |

**பேருந்து முனையம் 2 (கிழக்கு புறம்)-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்புகள்**

| | | |
|---|---|---|
| 1. | மதிப்பீட்டுத் தொகை | : ரூ.10.45 கோடிகள் |
| 2. | பரப்பு | : (13250 ச.மீ) |
| 3. | பேருந்து நிறுத்துமிடம் | : 30 எண்ணிக்கை |
| 4. | வணிக வளாகம் | : 1 எண்ணிக்கை (691.69 ச.மீ) |
| 5. | கடைகள் (202 ச.அடி) | : 7 எண்ணிக்கைகள் (450.82 ச.மீ) |

6. பெட்டிகடைகள் :10 எண்ணிக்கைகள் (575.8 ச.மீ)

7. கழிப்பறைகள் :1 எண்ணிக்கை (58.00 ச.மீ)

8. பயணிகளின் ஓய்வுதளம் :1 எண்ணிக்கை (372.00 ச.மீ)

9. உணவகம் :2 எண்ணிக்கை (154.00 ச.மீ)

10. பயண சீட்டு முன்பதிவு அறை :1 எண்ணிக்கை (79.00 ச.மீ)

11. கண்காணிப்பு அறை :1 எண்ணிக்கை (20.00 ச.மீ)

### 6. காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் மறுசீரமைத்தல்

கோயம்புத்தூர் மாநகர மத்திய பகுதியில் உள்ள காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு 1974-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது இப்பேருந்து நிலையத்தின் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து மேற்கூரைகளில் உள்ள கான்கிரீட் கலவை பெயர்ந்து கீழே விழுகிறது. பொது மக்களின் பாதுகாப்பு கருதியும் மற்றும் வாகன போக்குவரத்தினை கருத்தில் கொண்டும் மேற்படி வளாகத்தில் உள்ள பழுதடைந்த கட்டிடங்களை இடித்துவிட்டு புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய தரை தளம் மற்றும் முதல் தளம் ஆகிய இரு தளங்களுடன் கூடிய பேருந்து நிலையமாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து நிலையத்தில் தினசரி 998 எண்ணிக்கையிலான பேருந்துகள் நாள் ஒன்றுக்கு மூன்று மற்றும் நான்கு முறை 1416 எண்ணிக்கையில் வந்து செல்கிறது. மேலும் 1,20,000 எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயன்படுத்துகிறார்கள். வளர்ந்து வரும் மாநகரமாக இருப்பதாலும் பொதுமக்கள் அதிகமாக வெளியூர் சென்று வருவதாலும் புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் நவீனப்படுத்துவதன் மூலம் அன்றாட போக்குவரத்திற்கு சுலபமாக இருக்கும் வகையில், இப்பேருந்துநிலையத்தில் பேருந்து நிறுத்துமிடம், காத்திருப்பு அறை, கடைகள், பயணிகளின் பொருட்கள் பாதுகாப்பு அறை,

குளியல் அறைகளுடன் கூடிய கழிப்பிட வசதிகள், இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், நேரம் காப்பாளர் அலுவலகம், தகவல் தெரிவிக்கும் அறை, பாலூட்டும் அறை போன்ற நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.30 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ரூ.30 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு "உள்ளூர் திட்டக்குழுமம்" நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யக் கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 7. சிங்காநல்லூர் பேருந்து நிலையம் மறுசீரமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் உள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையம் சுமார் 22 ஆண்டுகளுக்கு முன்பு 2002-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது இப்பேருந்து நிலையம் தாழ்வான பகுதியில் உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கிவிடுகிறது. இதனால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறு ஏற்படுகிறது. எனவே பேருந்து நிலையம் முழுவதும் உயர்த்துவதற்கும் புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையமாக மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து நிலையத்தில் தினசரி 300 எண்ணிக்கையிலான பேருந்துகள் நாள் ஒன்றுக்கு மூன்று மற்றும் நான்கு முறை என வந்து செல்கிறது. மேலும் நாள் ஒன்றுக்கு 10,000 எண்ணிக்கையிலான பொதுமக்கள் பயன்படுத்துகிறார்கள். மேலும் வளர்ந்து வரும் மாநகரமாக இருப்பதாலும் பொதுமக்கள் அதிகமாக வெளியூர் சென்று வருவதாலும் புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்களின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டும் நவீனப்படுத்துவதன் மூலம் போக்குவரத்திற்கு சுலபமாக இருக்கும் வகையில், இப்பேருந்து நிலையத்தின் முன்பகுதிகளில் வணிகவளாகம் கட்டுவதற்கும், பேருந்து நிலையத்தின் சில பகுதிகளில் பராமரிப்புபணி செய்யவும், கழிப்பறைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும், பேருந்து நிலையத்தின் மேற்கூரைகளை மாற்றி அமைக்கவும்,

சிமெண்ட் கான்கிரீட் ஓடுதளம் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.10 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ரூ.10 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு "உள்ளூர் திட்டக்குழுமம்" நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்து புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு நகர் ஊரமைப்பு துறைக்கு உரிய நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

### 8. கிராஸ்கட் சாலையில் வணிக வளாகம் கட்டுதல்

காந்திபுரம் கிராஸ்கட் சாலையில் உள்ள லட்சுமி காம்ப்ளக்ஸ் வளாகத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள இடத்தில் கூடுதலாக வணிக வளாகம் அமைப்பதற்கு பொது நிதியில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 9. கிராஸ்கட் சாலையில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

காந்திபுரம் கிராஸ்கட் சாலையில் பண்டிகை காலங்களிலும், மற்ற நாட்களிலும் கூட்டநெரிசல் அதிகமாக உள்ள பகுதியாகும். இங்கு உள்ள வணிக வளாகங்கள் மற்றும் அங்காடிகளுக்கு நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லும் இடமாகவும் உள்ளது. இதனால் சாலை ஓரங்களில் வாகனங்கள் அதிகமாக நிற்பதால் பொதுமக்கள் நடந்து செல்ல வழியில்லாமல் நெரிசல் அதிகமாகிறது.

எனவே ஒரே சமயத்தில் 200 முதல் 400 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் பொது நிதியில் ரூ.10 கோடிக்கு நிறுவப்படவுள்ளது.

### 10. ராஜவீதியில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் மரக்கடை மற்றும் டவுன்ஹால் பகுதிகள் முக்கிய சாலையின் சந்திப்புகளாக உள்ளதால், வெளியூர் மற்றும் மாநகராட்சியிலிருந்து மற்ற

மாநிலங்களுக்கு செல்பவர்கள் இச்சாலையை கடந்து செல்வதாலும், தினசரி வேலைக்காக வெளியூர் சென்று வருபவர்கள் தங்களது வாகனங்களை சாலையின் இரு பகுதிகளிலும் ஆங்காங்கே நிறுத்தி செல்வதால் பொதுமக்களின் கூட்ட நெரிசலை சமாளிக்க முடியாமலும் வாகனங்களை பாதுகாக்க முடியாத நிலையில் உள்ளது.

எனவே நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் பொது நிதியில் ரூ.15 கோடிக்கு நிறுவப்படவுள்ளது.

### 11. டி.பி.சாலையில் உணவகம் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட பகுதியான டி.பி.சாலையில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் பொதுமக்களுக்கு உபயோகமாகவும் மாநகராட்சியின் வருவாயினை பெருக்கும் விதமாகவும் உணவகம் கட்டுவதற்கு ரூ.5.50 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணி பொது மற்றும் தனியார் பங்களிப்பு நிதியுடன் (Public and Private Partnership mode)ல் மேற்கொள்ளப்படும்.

### 12. கிருஷ்ணசாமி சாலையில் வணிக வளாகம் அமைத்தல்

கிருஷ்ணசாமி சாலை தேவாங்க பேட்டை பள்ளி அருகில் மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் வணிக வளாகம் அமைக்க ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் இப்பணி பொது மற்றும் தனியார் பங்களிப்பு நிதியுடன் (Public and Private Partnership mode)-ல் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 13. தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் புனரமைத்தல் (TNIUS)

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் சாய்பாபா காலனி அழகேசன் சாலையில் உள்ள தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்தில் புதிய கட்டிடங்கள் ஏற்படுத்த ரூ.35

கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையம் மற்றும் அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் இருந்தும் பங்கு தொகை பெற்று கோயம்புத்தூர் மாநகராட்சி மூலம் இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**14. சக்தி சாலையிலிருந்து அவிநாசி சாலை வழியாக திருச்சி சாலையில் உள்ள நொய்யல் வரை சங்கனூர் பள்ளத்தின் இருபுறமும் தடுப்புச்சுவர் கட்டி தார்சாலைகள்அமைத்தல்.**

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட சக்தி சாலையிலிருந்து அவிநாசி சாலை வழியாக திருச்சி சாலையில் உள்ள நொய்யல் வரை சங்கனூர் பள்ளத்தின் இருபுறமும் தடுப்புச்சுவர் கட்டி தார்சாலைகள் 6.80 கி.மீ நீளத்திற்கு அமைக்கவும் ரூ.235 கோடி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு நிதியுதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

**15. HLR பாரதி பார்க்கில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு வர்ணம் பூசுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல்**

மத்திய மண்டலம் பாரதி பார்க்கில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி (HLR) வர்ணம் பூசுதல், நீர்தேக்கத் தொட்டியில் ஏற்படும் கசிவுகளை சரிசெய்தல் மற்றும் பழுதடைந்த குழாய்களை மாற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.50 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

**16. பிரதான அலுவலகம் மற்றும் மண்டலம் / வார்டு அலுவலக வளாகங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்**

பிரதான அலுவலகத்தில் நூலகம், கழிப்பறை வசதிகளை மேம்படுத்துதல், அனைத்து பிரிவுகளிலும் கணிப்பொறி, நகல் எடுக்கும் இயந்திரம் மற்றும் கணினிகளுக்கு Anti- Virus கொண்டு பராமரித்தல், குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல் மற்றும் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள ரூ. 1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாநகராட்சிக்கு உட்பட்ட ஐந்து மண்டலங்கள் மற்றும் வார்டு அலுவலகங்களில் உள்ள கட்டிடங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

**17. நீர்நிலைகளை பராமரித்தல்**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 9 குளங்களில் கழிவுநீர் கலப்பதை தடுக்க 7 இடங்களில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சமீபத்திய ஆய்வில் மேலும் 5 இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான தோராய செலவினம் ரூ. 50 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**18. நொய்யல் ஆற்றினை மேம்படுத்துதல்**

கோயம்புத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலையில் கோவை குற்றாலத்தில் துவங்கும் நொய்யல் ஆறு திருப்பூர், ஈரோடு, கரூர், திருச்சி ஆகிய மாவட்டங்கள் வழியாக 158.35 கி.மீ நீளத்திற்கு சென்று நொய்யல் என்னும் கிராமத்தில் காவேரி ஆற்றுடன் கலக்கிறது. மேற்கண்ட நொய்யல் ஆறு கோயம்புத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் 67.71 கி.மீ நீளத்திற்கும், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நொய்யல் ஆறு பேரூர் செட்டிபாளையம் முதல் மேற்கிலிருந்து கிழக்காக பட்டணம் இட்டேரி சாலை வரை 18.56 கி.மீ நீளத்திற்கு அமைந்துள்ளது. இவற்றில் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் 9.25 கிமீ நீளத்திற்கும், மத்திய மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் 5.00 கிமீ நீளத்திற்கு மற்றும் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் 4.31 கிமீ நீளத்திற்கும் மேற்கண்ட ஆறு அமைந்துள்ளது.

இந்நொய்யல் ஆற்றின் கரையின் அருகாமையில் உள்ள குடியிருப்பு மற்றும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுநீர் கலப்பதால், ஆற்றுநீர் மாசடைந்து வருகிறது. இதனை தடுக்கும் வகையில் நொய்யல் நதி மற்றும் நதியின் இரு கரைகளுக்கும் மேம்பாட்டு

பணிகள் மேற்கொள்ளவும், நொய்யல் ஆற்றில் முகப்பு அபிவிருத்தி பணிகள் மற்றும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள தோராயமாக ரூ.200 கோடிக்கு அரசிடம் நிதி கோரப்பட்டுள்ளது..

**மேலும் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.**

1. திடக்கழிவுகள் (குப்பைகள்) மற்றும் இதர கழிவுகள் கொட்டப்படாமல் தடுத்தல்
2. தேவைப்படும் இடங்களில் சிறிய நீர்தேக்க அமைப்புகள் ஏற்படுத்துதல்
3. கழிவுநீர் கலக்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்
4. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்
5. அழகு மிகுந்த ஸ்பான்ஞ்ச் பூங்கா (நீர்சேமிப்பு) அமைத்தல்
6. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்தல்
7. பொழுதுபோக்கு அம்சங்கள் (நடைபாதை, Cycling Track, குடிநீர் வசதிகள் மற்றும் கழிப்பிட வசதிகள் ஆகிய பணிகள்) அமைத்தல்
8. ஆற்றின் இரு புறங்களிலும் ஒட்டியுள்ள பகுதிகளை புனரமைத்தல்
9. மாசுக்கட்டுப்பாட்டு அமைப்புகள் ஏற்படுத்துதல்
10. இருபுறமும் போக்குவரத்து சாலைகள் அமைத்தல்
11. தடுப்புசுவர் அமைத்தல்
12. மின்விளக்குகள் அமைத்தல்
13. தேவைப்படும் இடங்களில் ஆற்றின் குறுக்காக பாலங்கள் அமைத்தல்

மேற்படி பணிகளை செய்ய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொருட்டு திட்ட ஆலோசகர் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படும். மேற்கண்ட பணிகளில் முதற்கட்ட பணியாக மாநகராட்சி நிர்வாகத்தின் மூலம் ஆற்றின் இருபக்க எல்லைகளை வரையறை செய்ய அளவீடுகள் செய்யப்பட்டு ஆற்றின் இருபுறங்களிலும் எல்லை கற்கள் நடும் பணி

முடிக்கப்படும். நொய்யல் ஆற்றில் கலக்கும் கழிவுநீரினை சுத்தப்படுத்த முதற்கட்டமாக 3 இடங்களில் கால்வாயுடன் கூடிய சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.30 கோடிக்கு அரசின் நிதி உதவி கோரப்படும்.

மேலும் இரண்டாம் கட்டமாக 8 இடங்களில் கால்வாயுடன் கூடிய சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.50 கோடிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்ப நடவடிக்கையில் உள்ளது.

### 19. சுய உதவிகுழுக்கள் மூலம் பூங்காக்கள் பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள பூங்காக்களை சுய உதவிகுழுக்கள் மூலம் பராமரிக்க முதற்கட்டமாக 11 எண்ணிக்கையிலான பூங்காக்கள் 2024-2025 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இரண்டாம் கட்டமாக 10 எண்ணிக்கையிலான பூங்காக்கள் 2025 - 26 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் அம்ரூத் மித்ரா திட்டத்தின் மூலம் அரசின் நிதி உதவி பெற்று இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

### 20. மாமன்ற உறுப்பினர்களுக்கு வார்டு பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் வார்டு பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள வார்டு ஒன்றுக்கு ரூ. 55 இலட்சம் வீதம் 100 வார்டுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 21. அறிவுசார் மையத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் :

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் ஆடிஸ் வீதியில் உள்ள அறிவுசார் மையத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சியினை சோசியோபோடென்ட்ஸ் நிறுவனத்தின் மூலம் 30 நாட்களுக்கு ஒரு பயிற்சி வீதம் 12 பயிற்சி திட்டங்கள் வழங்குவதோடு, பயிற்சியின் போது

பங்கேற்பாளர்களுக்கு மதிப்புமிக்க வேலைவாய்ப்புகளையும் வழங்குகின்றனர். இந்த பயிற்சியின் நோக்கம், நவீன காலத்தின் வேகமாக மாறும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தனிநபர்கள் திறன் மேம்படும். எனவே இப்பணிகள் மேற்கொள்ள ரூ. 90 இலட்சத்திற்கு பயிற்சிகள் நடத்தப்படும்.

ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ. 60 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

அறிவுசார் மையத்திற்கு நாளுக்கு நாள் படிக்க வரும் இளைஞர்கள் மற்றும் மாணாக்கர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால் கூடுதலாக புத்தகங்கள் தேவைப்படுகிறது. இதற்கான பணிகள் மேற்கொள்ள தோராயமாக ரூ. 80 இலட்சம் செலவினம் ஆகும்.

### 22. ராஜ வாய்க்கால் தானியங்கி முறையில் Sluice Shutter அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண். 60-ல் உள்ள திருச்சி சாலை பெர்க்ஸ் பள்ளி நுழைவாயில் அருகில் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் செல்வதை தடுக்கும் பொருட்டு தானியங்கி முறையில் Sluice Shutter அமைத்தல் பணிக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 23. சமுதாயக்கூடம் புதியதாக கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 55-க்குட்பட்ட SIHS காலனி பகுதியில் புதியதாக சமுதாயக்கூடம் (தரைதளம் மற்றும் முதல் தளம் 4800 சதுர அடி பரப்பில்) கட்டுதல் பணிக்கு ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 24. முனிசிபல் பத்திரம் (Municipal Bond)

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை பணி மற்றும் செம்மொழி பூங்கா பணி ஆகியவை முனிசிபல் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் நிதி திரட்டி பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 25. மழைநீர் வடிகால் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக 350 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால்கள் 293.88 கி.மீ நீளத்திற்கு அமைக்க ரூ. 250 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 26. STEM பூங்காவில் அறிவியல் சார்ந்த வகையில் கூடுதல் மேம்பாடு

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண். 10 பூந்தோட்டம் நகரில் உள்ள STEM பூங்காவில் அறிவியல் சார்ந்த வகையில் கூடுதல் மேம்பாட்டிற்காக ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 27. பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களிலும் ஏற்கனவே செயல்பட்டு வரும் மாநகராட்சி பள்ளிகளில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 28. அறிவுசார் மையம் அமைத்தல்

வடக்கு மண்டலத்தில் புதியதாக அறிவுசார் மையம் அமைக்க ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 29. ABC மையத்தினை பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள Animal Birth Control மையத்தினை இயக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 30. நவீன ஆடு அறுவை மையம் மேம்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள நவீன ஆடு அறுவை மையங்களை மேம்படுத்துதல் பணி மேற்கொள்ள ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 31. புதியதாக ABC மையம் அமைத்தல்

வடக்கு மண்டலம், வார்டு எண். 02-ல் வெள்ளக்கிணறு பகுதியில் உள்ள வெள்ளக்கிணறு கால்நடை மருத்துவமனை வளாகத்தில் Animal Birth Control மையம் அமைக்க ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வெள்ளலூரில் உள்ள Animal Birth Control மையத்திலும் மற்றும் புதியதாக கட்டப்படவுள்ள வெள்ளகிணறு கால்நடை மருத்துவமனை மையத்திலும் தெருக்களில் சுற்றிதிரியும் நாய்களை பிடித்து அடைக்ககூண்டு (Kennel) இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிதியுடன் அமைக்கப்படும்.

### 32. புதியதாக எரிவாயு தகன மேடை அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பாலக்காடு பிரதான சாலையில் சுகுணாபுரம் மைல்கல் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான 5.40 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்துக்கள் மயானத்தில் புதியதாக எரிவாயு தகனமேடை அமைக்க ரூ.3 கோடிக்கு பணிகள் அரசுநிதி பெற்று மேற்கொள்ளப்படும்.

### 33. மழைநீர் சேகரிக்கும் தொட்டி அமைத்தல் :

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 250 எண்ணிக்கையிலான பழுதடைந்த போர்வெல் மற்றும் கிணறுகளில் மழைநீர் சேகரிக்கும் தொட்டிகள் அமைக்கவும், அலுவலக கட்டிடங்கள், பள்ளிகள், மழைக்காலங்களில் மழை நீர் தேங்கும் இடங்கள் மற்றும் வணிக வளாக பகுதிகளில் மழை நீர் தேங்கா வண்ணம் ஈகோ ப்ளாக் கொண்டு மழைநீர் சேகரிக்கும் தொட்டிகள் அமைக்கவும் ரூ.8 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 34. சுண்டக்காமுத்தூர் குளம்

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.89-க்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் குளம் 7.25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்குளத்திற்கு மாநகராட்சி எல்லைக்கு அருகில் உள்ள மலைப்பகுதிகளில் இருந்து மழை காலங்களில் சேகரம் ஆகும் மழைநீர் அப்பகுதியில் உள்ள திறந்தவெளி நிலங்களின் வழியாக சுண்டக்காமுத்தூர் குளத்தை வந்தடைந்து குறிப்பிட்ட காலத்தில் குளம் அதன் முழுகொள்ளளவை அடைந்து விடும். இதன் காரணமாக குளத்தை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளின் நீர்மட்டம் நல்ல நிலையில் இருந்தது. தற்பொழுது மேற்கண்ட பகுதியில் உள்ள நிலங்கள் வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு சாலைகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதால், மேற்கண்ட பகுதியில் சேகரம் ஆகும் மழைநீர் சுண்டக்காமுத்தூர் குளத்தை வந்தடைய இயலாத நிலையில் உள்ளதால் இக்குளத்திற்கு கடந்த 20 ஆண்டுகளாக தண்ணீர் நிரப்ப இயலாத நிலையில் உள்ளது.

மேற்கண்டகுளத்திற்கு குனியமுத்தூர் செங்குளத்திற்கு செல்லும் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வாய்க்காலின் அருகில் உள்ள மாநகராட்சி இடத்தில்

நீர்சேமிப்பு கிணறு அமைத்து குழாய் அமைத்து மின்மோட்டார் பொருத்தி சுண்டக்காமுத்தூர் குளத்திற்கு தண்ணீர் நிரப்பும் பணிக்கு மதிப்பீடு ரூ.2.41 கோடிக்கு மேற்கொள்ளப்படவுள்ளது.

### 35. Smart Lab

கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளில் உலகத்தரம் வாய்ந்த கல்வியினை மாணவர்களுக்கு வழங்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய கற்பித்தல் முறையினை பயன்படுத்தி வகுப்புகள் நடத்தப்படும். எனவே 3 Smart Lab அமைக்க ரூ.3 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 36. ஒருங்கிணைந்த நவீன விளையாட்டு அரங்கம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.72-க்குட்பட்ட சாஸ்திரி மைதான வளாகத்தில் கால்பந்து, கைப்பந்து மற்றும் கூடைப்பந்து வீரர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சியாளர்களை கொண்டு தொடர்ச்சியான பயிற்சிகள் மேற்கொண்டு விளையாட்டு வீரர்கள் உலக தரமான போட்டிகளில் பங்குபெறும் வகையில் 6 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச தரத்தில் ஒருங்கிணைந்த நவீன விளையாட்டு மைதானம் அமைக்க ரூ.14 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 37. பூங்காக்கள் பராமரிப்பு செய்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 630 எண்ணிக்கையிலான பூங்காக்களில் உள்ள பழுதடைந்த விளையாட்டு பொருட்கள், குழாய்களை மாற்றுதல் மற்றும் முட்புதர்களை அகற்றி, இயக்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.30 கோடிக்கு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 38. மாநகராட்சி கலையரங்கம் புதுப்பித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.71-க்கு உட்பட்ட திருவேங்கடசாமி சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான கலையரங்கத்தினை ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

### 39. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் Integrated Commandand Control Centre (ICCC) கூடுதல் அபிவிருத்தி பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.71 சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### 40. மாநகரத்தினை அழகுபடுத்துதல்

எழில்மிகு கோவையை மேலும் அழகுபடுத்த திருச்சி சாலை, மேட்டுப்பாளையம் சாலை, உக்கடம், ஆத்துப்பாலம் சாலைகளில் உள்ள மேம்பால பில்லர்களில் மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வர்ணங்களை கொண்டு காப்பியங்கள், காவியங்கள், தியாகிகளின் படங்கள் மற்றும் திருக்குறள்கள் ஆகியவற்றோடு அழகிய ஓவியங்களையும் வரைய தோராயமாக ரூ.2 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 41. தெருக்களுக்கான பெயர் பலகைகள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மண்டலத்திற்கு ஒரு வார்டு வீதம் ஐந்து வார்டுகளில் உள்ள தெருக்களுக்கு பெயர் பலகைகள் அமைக்கவும், மாநகர எல்லை பெயர் பலகைகள் அமைக்க ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 42. ஆகாய தாமரை அகற்றுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் ஆகாய தாமரை வளர்ந்து நீர்நிலைகளை ஆக்கிரமித்துக் கொள்கிறது. இதனை அவ்வப்போது அகற்றும் பொருட்டு இயந்திரம் வாடகைக்கு எடுத்துக் கொள்ளவும், அதற்கான செலவினத் தொகை தோராயமாக ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 43. சிங்காநல்லூர் குளத்தில் கூடுதலாக அபிவிருத்தி பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.61-ல் உள்ள சிங்காநல்லூர் குளத்தில் கூடுதலாக நடைபயிற்சி பாதை மொத்தம் 3200 மீட்டர் அமைத்தல், குளத்தை சுற்றிலும் மிதிவண்டி பாதை அமைத்தல், பொது மக்கள் ரசிக்க மர வீடு (View Point) அமைத்தல், திறந்த வெளி அரங்கம் அமைத்தல், படகு போக்குவரத்து நிறுத்தும் தளம் அமைத்தல், பசுமையான புல்வெளி அமைத்தல், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய மின்விளக்கு அமைத்தல், சிறுவர் விளையாட்டு பூங்கா அமைத்தல், கழிப்பிட வசதிகள் அமைத்தல் மற்றும் பொது மக்களுக்கு அனைத்து வகையான பொழுதுபோக்கு வசதிகள் மேற்கொள்ள ரூ.13 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 44. திவான் பகதூர் சாலையில் உள்ள பல அடுக்கு வாகன நிறுத்துமிடம்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் திவான் பகதூர் சாலையில் உள்ள பல அடுக்கு வாகன நிறுத்துமிடத்தினை பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public and Private Partnership mode) இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இதனால் மாநகராட்சியின் வருவாய் அதிகரிக்கக்கூடும்.

### 45. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பாதுகாப்பு வீதிகள் (Safe Streets for School and College Students) அமைத்தல்

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு செல்லும் மாணவர்களின் பயணத்தை பாதுகாப்பாக மற்றும் வசதியாக நடப்பதற்கு, சைக்கிள் ஓட்டுவதற்கு மற்றும் பொது போக்குவரத்து பயன்பாட்டிற்கான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பாதுகாப்பு வீதிகளை உருவாக்குவது முக்கியம். இது, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், சுற்றியுள்ள பகுதிகளை இணைக்கவும், மற்றும் பள்ளியில் மாணவர்களின் செயல்திறனை அதிகரிக்க உதவும். முதல் கட்டமாக, மத்திய மண்டலத்தில் உள்ள ராமநாதபுரத்தில் மொத்தம் 2.5 கிலோமீட்டர் நீளமுள்ள திருச்சி நெடுஞ்சாலை மற்றும் காமராஜர் சாலைக்கு தெரு மேம்பாட்டுத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. ரூ.2.50 கோடி மதிப்பீட்டில், இந்தத் திட்டம் தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் உட்பட இந்தப் பகுதியில் உள்ள பல கல்வி நிறுவனங்களுக்கு பாதுகாப்பான வழித்தடத்தை ஏற்படுத்தும். தெரு வடிவமைப்பு வழிகாட்டுதல்களின்படி (Healthy Streets Design Guidelines), பாதுகாப்பான பாதசாரி நடைபாதைகள், பிரத்யேக பாதசாரிகள் கடக்கும் வசதி மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட போக்குவரத்து இயக்கத்தை கட்டுப்படுத்தவும், குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் பாதசாரிகளின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public and Private Partnership mode) பணி மேற்கொள்ளப்படும்.

### 46. மோட்டார் அல்லாத போக்குவரத்தினை மற்ற பகுதிகளில் செயல்படுத்த திட்டம்

நகரின் மற்ற பகுதிகளில் இந்த திட்டத்தினை விரிவுபடுத்துவதற்காக, கோயம்புத்தூர் தெரு வடிவமைப்பு மற்றும் மேலாண்மை கொள்கை 2017 (Coimbatore Street Design and Management Policy 2017) மேம்படுத்தப்பட்டு, NMT (Non-Motorised Transport) பொது நிதியின் கீழ் இத்திட்டம் மேற்கொண்டு செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 47. பேருந்து நிழற்குடை அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களிலும் சுமார் 116 எண்ணிக்கையிலான பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடை அமைத்தல் பணிக்கு ரூ.12 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடனும் விளம்பர பதாகைகள் ஏற்படுத்துதல் மூலம் பொது நிதியிலிருந்தும் இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 48. விடுபட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் மற்றும் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளின் தூரத்தினை சரிசெய்யும் பொருட்டு 5340 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் நிர்பயா நிதியின் கீழ் ரூ.23 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 49. புதியதாக வார்டு அலுவலகம் அமைத்தல்

ஐந்து மண்டலங்களிலும் உள்ள வார்டு பகுதிகளில் சுகாதார அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கென புதியதாக வார்டு அலுவலகங்கள் தேவைக்கேற்ப அமைக்க ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள்மேற்கொள்ளப்படும்.

### 50. சாலை சந்திப்பில் மையத்தடுப்பு சுவர் ஏற்படுத்தி பசுமை பகுதியாக மாற்றுதல்

ஐந்து மண்டலங்களில் உள்ள சாலைகளில் மைய தடுப்பு ஏற்படுத்தவும், பசுமை பகுதியாக மாற்றவும் ரூ.2 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 51. போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள தெருவிளக்குகளை மாற்றியமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அமைக்கப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள தெருவிளக்குகள் / மின்கம்பங்கள்

சாலையின் இருபுறங்களிலும் மாற்றியமைக்க ரூ.3 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 52. மழைநீர் வடிகால்களை தூர்வாருதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் உள்ள வார்டு பகுதிகளில் மழைநீர் வடிகால்களில் உள்ள குப்பை மற்றும் மண்ணை அகற்றும் பணி மேற்கொள்ள ரூ.28 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 53. சிமெண்ட் சாலைகள் அமைத்தல்

மாநகராட்சி பகுதிகளில் மனைப்பிரிவில் உள்ள சிறிய இலகுரக வாகனங்கள் செல்லக்கூடிய குறுக்கு சாலைகள், மக்கள் நடந்து செல்லப் பயன்படுத்தப்படும் சந்துகளுக்கு சிமெண்ட் கான்கிரிட் தளம் அமைக்க ரூ.5 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 54. பூங்காக்களில் மரம் நடுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள திறவிடங்கள் / பூங்காக்களில் மரம் நடுதல் பணிக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 55. துடியலூர் வாரச்சந்தை, புதியதாக வணிக வளாகம் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண். 2-ல் துடியலூர் வாரச்சந்தை 40 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது. அங்குள்ள வணிக வளாகம் மிகவும் பழமை வாய்ந்த ஓடுகூரை அமைப்பாக இருப்பதால் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளது. மேலும் மேற்கூறிய வணிக வளாகம் துடியலூர் பேருந்து நிலையம் மற்றும் மேட்டுப்பாளையம் சாலைக்கு அருகில் அமைந்துள்ளது. இது சுற்றியுள்ள பகுதிகளில் முக்கிய போக்குவரத்து மற்றும் வணிக மையமாகவும், வாடகைக்கு கடைகள் அதிக தேவை உள்ள ஒரு முக்கிய வணிகப் பகுதியாகவும்உள்ளது.

அதன்படி, துடியலூர் வாரச்சந்தையில் 12 கடைகள் கட்டுவதற்கான மதிப்பீடு ரூ. 95 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு இந்நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

### 56. துடியலூர் பேருந்து நிலையம்

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்-1 க்குட்பட்ட துடியலூர் பேருந்து நிலையம் மக்கள் அதிகமான நெருக்கடி உள்ளதால் இப்பேருந்து நிலையத்தினை மேம்படுத்த ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 57. கொடிசியா சாலையில் வணிக வளாகம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 24-ல் உள்ள கொடிசியா சாலையில் கடைகள் கட்டுதல் பணிக்கு ரூ3 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 58. ஆவாரம் பாளையம் ஷோபா நகர் பகுதியில் பாலம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.28, சோபா நகர்-2ல், ஆவாரம் பாளையம் வழியாக செல்லும் சிங்காநல்லூர் கால்வாயில் ஒரு குழாய் பாலம் அமைந்துள்ளது. குழாய் பாலம் 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. மழைக்காலத்தில் அதிக நீர்வரத்து காரணமாக பாலத்தில் உள்ள குழாயில் அடைப்பு ஏற்பட்டு குடியிருப்பு பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்படுகிறது. 2024 ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழையின் போதுமேற்கூறிய கால்வாயில் பெய்த கனமழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக பட்டாளம்மன் கோயில் தெரு, ஸ்ரீ வல்லி நகர் மற்றும் ஷோபா நகர் பகுதிகளில் உள்ள கால்வாய்களின் அருகே அமைந்துள்ள வீடுகளுக்குள் மழைநீர் புகுந்து பொதுமக்களுக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தியது. 200-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். எனவே புதிய RCC பாலம் கட்டுவதற்காக ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 59. பூங்கா நகர் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டுஎண் 23-ல் உள்ள பூங்கா நகர் (விமான நிலைய இடம் கையகப்படுத்துதலுக்கு பதிலாக) பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல் பணிக்கு ரூ4.65 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசு நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 60. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துதல் (Airport Authority of India)

கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் கிழக்கு மண்டலத்தில் உலக பன்னாட்டு விமான நிலையம் மற்றும் கோவை மாநகராட்சியும் இணைந்து மாநகராட்சிக்கு தேவையான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த பன்னாட்டு விமான நிலையம் தனது சொந்த செலவில் (தோராயமாக) ரூ.75 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சிக்கு தேவையான வசதிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

### 61. சிறுவாணி சாலை மற்றும் மருதமலை சாலை சந்திப்பில் புதிய பாலம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்- 41 க்குட்பட்ட சிறுவாணி சாலை மற்றும் மருதமலை சாலை சந்திப்பு பகுதியில் பொதுமக்கள் பயன்பாடு அதிகமாக இருப்பதாலும், ஏற்கனவே உள்ள பாலம் மிகவும் குறுகியதாக இருப்பதாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. தற்போது உள்ள பாலத்தை அகலப்படுத்தி கட்டுவதால் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் சாலையை எளிதில் கடக்க இயலும். எனவே ரூ. 3 கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்க பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

### 62. ஆம்னி பேருந்து நிலைய வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்-48, சக்தி சாலையில் உள்ள ஆம்னி பேருந்து நிலையத்திற்கு தினசரி வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களுக்கு செல்ல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். இவ்வாறு வருபவர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏதுவாக இப்பேருந்து நிலையத்திற்கு அருகில் சக்தி சாலையில் அமைந்துள்ள உயர்மட்ட மேம்பாலத்தின் கீழ் தளம் தேசிய நெடுஞ்சாலைக்கு சொந்தமானது.

எனவே தேசிய நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி பெற்று மேற்படி பாலத்தின் கீழ் உள்ள இடத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்துமிடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 63. விளையாட்டு மைதானத்துடன் கூடிய நடைபாதை அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 55-ல் உள்ள எஸ்.ஐ.எச்.எஸ் காலனி பொது ஒதுக்கீட்டு இடத்தில் விளையாட்டு மைதானம் மற்றும் நடைபாதை அமைத்தல் பணிக்கு ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 64. சமுதாயக் கூடம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 57-ல் உள்ள சமுதாயக் கூடம் கட்டுதல் பணிக்கு ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 65. கருப்பராயன் பாளையம் குளத்தை மேம்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.6-ல் உள்ள கருப்பராயன் பாளையம் குளம் மற்றும் காளப்பட்டி குட்டை மேம்படுத்துதல் பணிக்கு ரூ.6.50 கோடி

மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 66. மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலங்கள் திரும்பக் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்களை புதுப்பிக்க ரூ.5 கோடி மதிப்பீட்டில் இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 67. இரவு நேர பாடசாலை (Study Center)

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.61-ல் உள்ள பட்டத்தரசி அம்மன் கோயில் வீதி அருகில் இரவு நேர பாட சாலை கட்டுதல் பணிக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

### 68. வாய்க்கால் ஓரம் தடுப்புச் சுவர் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.61-ல் கதிரவன் கார்டன் பகுதியில் உள்ள வாய்க்கால் நிரம்பி அப்பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்குள் தண்ணீர் வருவதை தடுக்க தடுப்புச்சுவர் கட்டுதல் பணிக்கு ரூ1.50 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 69. திருமண மண்டபம் மேம்பாட்டு பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 60-ல் உள்ள ஜே.ஜே. திருமண மண்டபம் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ.4 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 70. பேருந்து நிழற்குடை அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி அவிநாசி சாலையில் உள்ள 32 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடை அமைக்க நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து நிதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 71. வெள்ளலூர் பேருந்து நிலையத்தினை லாரிப் பேட்டையாக மாற்றுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் செட்டிபாளையம் சாலையில் வெள்ளலூர் கூடுதல் பேருந்து முனையம் மாநகராட்சிக்கு சொந்தமான 61.81 ஏக்கர் பரப்பளவில் தரைதளம் மற்றும் முதல் தளத்தில் 231340 சதுரடி பரப்பளவில் ரூ52.46 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி பொது நிதியில் கட்டப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ளது. இம்மாநகராட்சியில் மொத்த காய்கறி அங்காடி, மொத்த பழ அங்காடி விற்பனை ஒருங்கிணைந்த சந்தைகள் இல்லாத காரணத்தினால் மேற்குறிப்பிட்டுள்ள பேருந்து நிலைய கட்டிடத்தினை மொத்த காய்கறி அங்காடி, மொத்த பழ அங்காடி மற்றும் கனரக வாகன பதிவு அலுவலகம் மற்றும் கனரக வாகனங்கள் நிறுத்துமிடமாகவும் அமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் முழு வடிவில் செயல்படுத்துவதற்கான உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள மாமன்றத்தில் அனுமதி பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து, கோயம்புத்தூர் மோட்டார் டிரான்ஸ்போர்ட் கவுன்சில் என்ற சங்கத்தின் 06.02.2025 அன்றைய தேதியிட்ட கடிதத்தில் தங்களுடைய சங்க கூட்டமைப்பில் 17 சங்கங்கள் உறுப்பினர்களாக இருப்பதாகவும் தங்களது லாரி தொழில் வாழ்வாதாரத்தை காப்பாற்றிட வெள்ளலூரில் பேருந்து நிலையத்திற்காக கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள இடத்தினையும் தங்களது சங்கத்திற்கு வழங்க வேண்டுமாய் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும் இவ்விடத்தில் அடிப்படை வசதிகள் அதாவது கழிப்பிடங்கள், குளியலறைகள், ஒட்டுனர்களுக்கு ஓய்வறைகள், உணவு விடுதிகள், சுகாதார நிலையங்கள்,

மருந்துக் கடைகள், லாரி எடைமேடை, சரக்குகளை ஏற்றி இறக்கி வைக்க குடோன்கள், வாகனப்புகை பரிசோதனை நிலையம், பெட்ரோல் பங்க் அமைக்க இடம் மற்றும் புறகாவல் நிலையமும் அமைக்கப்படவுள்ளது.

எனவே இக்கட்டிடத்தில் தரைதளத்தில் மேற்கு பகுதி காய்கறி சந்தைக்கும், கிழக்கு பகுதியும் மற்றும் முதல் தளமும் லாரி பேட்டைக்கும் ஒதுக்கீடு செய்ய அரசின் உரிய அனுமதி பெறப்பட்டு இந்நிதியாண்டில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

### 72. பேருந்து நிலையத்தில் அபிவிருத்தி பணி செய்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்- 45-க்கு உட்பட்ட மேட்டுப்பாளையம் சாலை பேருந்து நிலையத்தில் உள்ள இரண்டாவது தளத்தில் மேற்கூரை பழுது பார்த்தல், குடிநீர் குழாய்கள், கழிப்பிடம் மற்றும் மின்சார வழிகள் பழுது பார்த்தல் பணிகள், மேலும் பேருந்து நிறுத்துமிடத்தில் பராமரிப்பு புதுப்பிக்கப்பட வேண்டும். எனவே சுமார் ரூ.75 லட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

### 73. புதிய இணைப்பு சாலை அமைத்தல்

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.40-க்கு உட்பட்ட நாகராஜபுரம், பொங்காளியூர் இணைப்பு சாலை அமைக்கப்படுமானால் பொதுமக்கள் எளிதாக பாலகணேசபுரம், பாலுகார்டன், வேலன் கார்டன் மற்றும் பொங்காளியூர் ஆகிய பகுதிகளிலிருந்து தொண்டாமுத்தூர் பிரதான சாலையை எளிதில் அடைய இயலும். தற்பொழுது பொங்காளியூர், பாலுகார்டன், வேலன் கார்டன் மற்றும் பாலகணேசபுரம் பகுதி மக்கள் சுமார் 1.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ள நிலையில் பொங்காளியூர் சாலையை சுற்றி, கடந்து செல்ல வேண்டி உள்ளது. இந்த இணைப்பு சாலை அமைக்கப்படுமானால் இவ்வாறு 1.5 கிலோ மீட்டர் தூரம் சுற்றி செல்லும் அளவு குறைந்து சுமார் 600 மீட்டர் தொலைவில் பிரதான சாலையை அடையலாம். இடையில் வரும் நீரோடையை கடக்க பாலமும் கட்டப்படுமானால்

இந்த இணைப்பு சாலை சுமார் 3000 முதல் 4000 வரையிலான மக்களுக்கு தினமும் சாலையை உபயோகிக்க பயனுள்ளதாக இருக்கும். எனவே மேற்காண் பணி ரூ.10 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி உதவி பெற்று மேற்கொள்ளப்படவுள்ளது.

### 74. இத்லாம் பாளையம் குட்டை மேம்படுத்துதல்

கோவை மாநகராட்சி, மேற்கு மண்டலம், வார்டு எண்.38 சுப்ரமணிய நகர் பகுதியில் இத்லாம் பாளையம் குட்டை உள்ளது. இது நீண்ட காலமாக பராமரிக்கப்படாமலும், தூர்வாரப்படாமலும் உள்ளதால் சீமைகருவேல மரங்கள் மற்றும் முட்செடிகளுடன் கூடிய மரங்கள் வளர்ந்து மழைநீர் சேமிக்க இயலாமல் உள்ளது. இந்த குட்டையினை தூர்வாரி, சீமைகருவேல மரங்கள் அகற்றி உபயோகப்படுத்தப்படுமானால் சுப்ரமணிய நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பெய்யும் மழைநீர் இந்த குட்டையில் சேமிக்க இயலும். மேலும் இதன் மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளுக்கு நிலத்தடி நீர்மட்டம் உயரும். மேலும் இந்த குட்டையை சுற்றிலும் பனை விதைகள் விதைக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த குட்டையை தூர்வாரி உபயோகப்படுத்தினால், அனைத்து மக்களும் மற்றும் மரங்கள், பறவைகள், விலங்குகளும் பயன்பெற இயலும். இந்த குட்டைக்கு மழைநீர் வரும் வழிகளை ஏற்படுத்துதல் மற்றும் குப்பை நிறைந்த பிறகு அருகிலுள்ள வாய்க்காலுக்கு செல்லும் வகையில் வழிகளில் பணிகளை மேற்கொள்ள உரியதிட்ட அறிக்கை தயார் செய்து பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

### 75. எரியூட்டு மயானங்கள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்-38 பொம்மனம் பாளையம் மற்றும் வார்டு எண்-40 வீரகேரளம் பகுதியில் உள்ள எரியூட்டு மயானங்கள் வடவள்ளி, வீரகேரளம் மற்றும் இதனை சுற்றியுள்ள அனைத்து பகுதி மக்களாலும், அருகில் உள்ள

பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் உள்ள மக்களாலும் மிகவும் அதிக அளவில் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பகுதிகளுக்கு இந்த இரண்டு இடங்களில் மட்டுமே எரியூட்டு மயானங்கள் உள்ளதால் அனைத்து மக்களும் உபயோகிக்கின்றனர். எனவே இந்த இரண்டு மயானங்களிலும் உள்ள எரியூட்டும் தகனமேடை புகைபோக்கி மற்றும் இதர சாதனங்கள் பலமுறை பழுதடைந்து அடிக்கடி மாற்ற வேண்டி உள்ளது. எனவே இந்த இரண்டு எரியூட்டு மயானங்களில் உள்ள எரியூட்டும் சாதனங்களையும் புகைபோக்கிகளையும் புதிதாக மாற்றும் பட்சத்தில் இன்னும் நல்ல முறையில் பொதுமக்களுக்கு சேவை அளிக்க இயலும். மேலும் புகைபோக்கிகள் அதிகப் புகையின் காரணமாக பலமுறை பல இடங்களில் ஓட்டை விழுந்து, புகையானது அதன் சுற்று வட்டார பகுதிகளை பாதிக்கும் அபாயம் உள்ளது. எனவே இந்த இரண்டு எரியூட்டு மயானங்களையும் பழுது பார்த்தல் மற்றும் சீரமைத்தல் அவசியமாகிறது. எனவே ரூ.5 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

### 76. காமராஜர் நகர் பகுதியில் வணிக வளாகம் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.16-க்கு உட்பட்ட காமராஜர் நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வணிக வளாகம் கட்டுவதினால் மாநகராட்சிக்கு வருமானம் அதிகரிக்கும் என்பதால் வணிக வளாகம் கட்டுதல் பணிகள் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

### 77. கே.என்.ஜி புதூர் முதல் டிவிஎஸ் நகர் வரையில் உள்ள பள்ளத்தில் தடுப்புச்சுவர் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 16-க்கு உட்பட்ட கே.என்.ஜி புதூர் முதல் டிவிஎஸ் நகர் வரையில் உள்ள பள்ளம் தடுப்புசுவர் இல்லாததால் பொதுமக்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர். எனவே பள்ளத்தில் தடுப்புச்சுவர் கட்டுதல் பணி மற்றும்

அதனை ஒட்டி உள்ள பகுதியில் தார்தளம் அமைக்கும் பணிகள் ரூ.12 கோடி மதிப்பீட்டில் அரசு உதவி பெற்று மேற்கொள்ளப்படவுள்ளது.

### 78. சேரன் நகர் பகுதியில் வணிக வளாகம் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.17-க்கு உட்பட்ட சேரன் நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வணிக வளாகம் கட்டுவதினால் மாநகராட்சிக்கு வருமானம் அதிகரிக்கும் என்பதால் ரூ.50 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 79. சரவணா நகர் முதல் சங்கனூர் வரை மழைநீர் வடிகால் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.16, 17 மற்றும் 33 -க்குட்பட்ட பல பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் செல்வதற்கு வழியில்லாமல் தேங்கி நிற்கின்றன. இதனால் பொதுமக்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர். சரவணா நகர் முதல் சங்கனூர் வரை 1600 மீட்டர் டிவிஎஸ் நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் கட்டித் தருமாறு பொதுமக்களும் மாமன்ற உறுப்பினர் அவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மழைநீர் வடிகால் கட்டுவதால் மேற்படி சாலையில் உள்ள 23 குறுக்குச் சாலைகளில் உள்ள மழைநீர் வடிகாலில் வந்து இணையும். எனவே இந்நிதியாண்டில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 80. சேரன் நகர் பகுதியில் IOT அடிப்படையிலான குடிநீர் திட்டம்

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 17-க்கு உட்பட்ட சேரன் நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ளது. IOT அடிப்படையிலான குடிநீர் வழங்கும் [Internet of Things Based water supply scheme]

திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்த ரூ.12.50 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி உதவி பெற்று பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

### 81. நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மராமத்துப் பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் 32 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக சாய்வு தளம் அமைத்தல், சுற்றுசுவர் பழுது பார்த்தல், நிழற்கூட கொட்டகைகள் அமைத்தல், நோயாளிகள் காத்திருப்பு இடம் அமைத்தல் உள்ளிட்ட மராமத்து பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 82. கட்டிடங்களை மேம்படுத்துதல் பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்களிலும் சமுதாயக் கூடங்கள், அங்கன்வாடி மையங்கள், பள்ளி கட்டிடங்கள் உள்ளிட்ட பணிகள் ரூ.24 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### 83. நகர்புற நல்வாழ்வு மையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் 16 நகர்புற நல்வாழ்வு மையங்களில் (அருள்கார்டன், கோணவாய்க்கால் பாளையம், காட்டூர், கள்ளிமடை, விஸ்வாசபுரம், சுப்ரமணியம் பாளையம், அப்பநாயக்கன் பாளையம், இந்திரா நகர், இளங்கோ நகர், அம்மன்கோவில் வீதி, அம்பாள் நகர், காமராஜ் நகர், கணபதி கார்டன், ஜெயந்தி நகர், வீரகேரளம்) ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுசுவர் பழுது பார்த்தல் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி மேற்கொள்ளப்படும்.

### 84. குடிநீர் குழாய்களை பராமரித்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் குழாய்களில் ஏற்படும் கசிவுகளை சரிசெய்யவும், பழுதடைந்த குழாயினை மாற்றவும் ரூ.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 85. கஸ்தூரி நகர் பகுதியில் அடிப்படை பணிகள் மேற்கொள்ளுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்.97-க்குட்பட்ட பகுதியில் அடிப்படை பணிகளான மழைநீர் வடிகால் அமைத்தல், சிறுபாலம் கட்டுதல் மற்றும் சாலைகளை புனரமைத்தல் பணிகள் ரூ.2.50 கோடியில் மேற்கொள்ளப்படும்.

### 86. சித்ரா நகர் குட்டையினை மேம்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்-9 ல் உள்ள சித்ரா நகர் குட்டையில் புதிதாக 2 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து சின்னவேடம்பட்டி முதல் சித்ரா நகர் வரை உள்ள கழிவுநீரினை சுத்தம் செய்து இக்குளத்தில் நிரப்பப்படும்.

மேலும் இப்பகுதியினை சுற்றி நிலத்தடி நீர் உயர்த்தும் வகையிலும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர்மட்டம் உயரும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே ரூ.4 கோடி மதிப்பில் அரசு நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 87. பழுதடைந்த நடைபாதையை மாற்றியமைத்தல்:

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.82 மற்றும் 83-க்குட்பட்ட பகுதிகளான மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து அரசு கலைக் கல்லூரி, நீதிமன்றம் மற்றும் ஸ்டேட் பாங்கு சாலை வரை இருபுறமும் உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே நடைபாதை கற்களை மாற்றியமைக்க ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 88. செங்குளம் கசிவு நீரினை மடைமாற்றம் செய்தல்:

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 88 ல் தென் பகுதியில் அமைந்துள்ள செங்குளம் மழைகாலங்களில் நிரம்பும் போது கரைகள் ஏற்கனவே பழுதடைந்துள்ளதால் நீர்கசிவு அதிகளவில் ஏற்பட்டு வார்டின் தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்து பொதுமக்கள் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். பொதுமக்கள் மற்றும் வார்டு மாமன்ற உறுப்பினர் ஆகியோரின் கோரிக்கையின் பேரில் குளத்தின் கசிவுநீரை மடைமாற்றம் செய்து தடுக்கும் வகையில் ஏற்கனவே ஜேஜேநகர் பிரதான சாலை மற்றும் சுண்டக்காமுத்தூர் பிரதான சாலையில் CGF நிதியில் ரூ.498 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது வெற்றித் திருநகர் முதல் செங்குளம் வரையில் ஜே.ஜே.நகர் பிரதான சாலையிலும், ஹீரா கார்டன் முதல் கருப்பண்ண தோட்டம் வரை சுண்டக்காமுத்தூர் பிரதான சாலையிலும் மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு ரூ.1.45 கோடிக்கு தயாரிக்கப்பட்டு உள்ளது.

### 89. செங்குளம் மேம்பாட்டு பணிகள்:

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண்:91-க்குட்பட்ட குளத்துப்பாளையம் நேதாஜி நகர் பகுதியில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள 720 அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் சுமார் 3500பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நேதாஜி நகர் முதல் செங்குளத்தின் மேற்கு குளக்கரை வழியாக குனியமுத்தூர் சாலை வரை 1.85 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதிதாக தடுப்புச்சுவர், தார்சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள 'தமிழ்நாடு உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி நிதி 2020-21 திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.15 கோடிக்கு அனுமதி பெறப்பட்டு தற்போது தடுப்புச்சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 90. மகளிர் பூங்கா மற்றும் மாற்றுத்திறனாளிகள் பூங்கா அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலங்களிலும் மண்டலத்திற்கு ஒன்று வீதம் மகளிருக்கு மட்டுமான பூங்காக்கள் அமைக்க ரூ.2.5 கோடி இந்தநிதியாண்டில் ஒதுக்கப்படும். கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள ஐந்து மண்டலங்களிலும் மண்டலத்திற்கு ஒன்று வீதம் மாற்றுத்திறனாளிகளுக்கான பூங்காக்கள் அமைக்க ரூ.2.5 கோடி இந்நிதியாண்டில் ஒதுக்கப்படும்.

### 91. வ.உ.சி.பூங்காவில் பறவைகளுக்கென பூங்கா அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 83-க்குட்ப்பட்ட வ.உ.சி. உயிரியல் பூங்காவில் பொதுமக்கள் கண்டுகளிக்க ஏதுவாக பறவைகளுக்கான பிரத்தியேகமாக பறவைகள் கண்காட்சி கூடம் சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும். இங்கு அரியவகை, சிறு குருவிகள், கிளிகள், மயில்கள், இருவாச்சி பறவைகள், வெளிநாட்டுவாழ் பறவைகள், அரியவகை புறாக்கள், நெருப்புக்கோழிகள், அரியவகை ஆமைகள் மற்றும் ஈமுக்கோழிகள் போன்ற பறவைகள் இடம்பெறும் வகையில் அலங்கார நுழைவாயிலுடன் அமையவுள்ளது.

### 92. சங்கனூர் பள்ளத்தில் பாலம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண். 31-க்குட்ப்பட்ட சம்பத் வீதியில் சங்கனூர் பள்ளத்தின் குறுக்காக சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பழுதடைந்த குறுகிய பாலத்தினை இடித்து விட்டு புதியபாலம் கட்டுவதற்கு ரூ.1 கோடி இந்நிதியாண்டில் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

### 93. ரேஸ்கோர்ஸ் பகுதியில் வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி ரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள அரசு காலி இடத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்க ரூ. 8 கோடி இந்நிதியாண்டில் பணி மேற்கொள்ளப்படும்.

### 94. ஸ்கேட்டிங் மைதானம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண்.89 கோவைப்புதூர் சரஸ்வதி நகர் பகுதியில் ஸ்கேட்டிங் மைதானம் அமைக்க ரூ.1 கோடி இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 95. வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண்.29க்குட்பட்ட கணபதிபுதூர் வீதி எண்.1 முதல் 6 வரை உள்ள பகுதியில் சுமார் 3000க்கு மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதி மிகவும் தாழ்வாக அமைந்துள்ள பகுதியாகும். இப்பகுதியில் அருகிலுள்ள நீர்வழிப்பாதை, வடிகால் மற்றும் இரயில்வே துறைக்கு சொந்தமான சிறுபாலங்கள் ஆகியவற்றில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால், பொதுமக்கள் 10 வருடங்களுக்கும் மேலாக மழைக்காலங்களில் சேகரமாகும் மழைநீர் வெளியேற வழியில்லாமல் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர். எனவே எதிர்காலத்தில் இந்நிகழ்வுகளைத் தவிர்க்கும் பொருட்டு பொது மக்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலனைக் கருத்திற்கொண்டு இரயில்வே துறையின் அனுமதியுடன் இப்பகுதியில் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அனைத்தையும் தூர்வாரவும், பிரதான இடங்களில் வடிகால் கட்டவும் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

### 96. நீர்வரத்து வாய்க்கால்களின் கரைகளை பலப்படுத்தி இணைப்பு சாலைகள் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி சங்கனூர் பள்ளத்தின் இரு கரைகளையும் பலப்படுத்தி இணைப்பு சாலைகள் அமைக்கப்படுவது போன்று இம்மாநகராட்சி பகுதிகளில் உள்ள நொய்யல் ஆற்றங்கரைகள், தெற்கு மண்டலத்திலுள்ள ராஜவாய்க்கால், வடக்கு மண்டலத்திலுள்ள சத்தி சாலை கட்டபொம்மன் வீதி முதல் அவினாசி சாலை வரையுள்ள கால்வாய், சரவணம்பட்டி அன்பொளி நகர் முதல் சின்னவேடம்பட்டி வரையுள்ள கால்வாய் போன்ற நீர்வரத்து வாய்க்கால்களின் கரைகளை பலப்படுத்தி இணைப்பு சாலைகள் அமைக்க ஆய்வு மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி இந்நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

### 97. மேல்நிலை பள்ளிக்கூடத்தில் கூரை அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 26 பயனியர் மில் ரோட்டில் அமைந்துள்ள மேல்நிலை பள்ளிக்கூடத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு வசதி ஏற்படுத்தும் பொருட்டு ரூ.35 இலட்சத்தில் செட் (Shed) அமைத்து கொடுக்க இந்நிதியாண்டில் நிதி ஒதுக்கப்படும்.

### 98. மின்வாகனங்களுக்கு சார்ஜிங் மையம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் மின்வாகனங்களுக்கு மின்னூட்டம் (Charging) ஏற்படுத்தும் பொருட்டு 20 இடங்களில் சார்ஜிங் மையம் அமைத்து மாநகராட்சியின் வருவாயினை பெருக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்..

### 99. நம்ம கோவை செயலி முறையில் பணிகள் மேற்கொள்ளுதல்:

#### I. கிரீன்கோவை செயலி

கிரீன்கோவை செயலி என்பது கோயம்புத்தூர் மாநகராட்சியின் மரம் நடும் பணிகளை கண்காணிக்க, நிர்வகிக்க, மற்றும் மேம்படுத்த உருவாக்கப்பட்ட இணைய மற்றும் மொபைல் செயலியாகும். இது GIS வரைபடம் மூலம் நகரின் பசுமை பரப்பை காண்பிக்கிறது. மொபைல் ஆப் மூலம் அதிகாரிகள் நேரடியாக தகவலை புதுப்பிக்கலாம், மேலும் புகைப்படம் மற்றும் நிலைத்தரவு (Geocode) பதிவேற்றம் மூலம் மரம் நடுதல் விவரங்கள் உறுதிபடுத்தப்படும். நேரடி கண்காணிப்பு மற்றும் தரவுத் தொடர்பு செயல்திறனை மேம்படுத்த உதவுகிறது, அதே சமயம் மண்டலம் மற்றும் வார்டு அடிப்படையிலான கண்காணிப்பு மூலம் முன்னேற்ற மதிப்பீடு செய்யப்படுகிறது. இதுவரை 14,418 மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்பம் வழியே பசுமை வளர்ச்சியை மேம்படுத்தும் நகர்புற முயற்சியாக கிரீன்கோவை செயலியை செயல்படுத்த ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

#### II. ICTS புகார்கண்காணிப்புஅமைப்பு Integrated Complaint Tracking System

புகார் கண்காணிப்பு அமைப்பு என்பது பொதுமக்களின் குறைகளை விரைவாக தீர்க்கவும், புகார்களை நிர்வகிக்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னோடியான டிஜிட்டல் தளம் ஆகும். இதில் பொதுமக்கள் தங்கள் புகார்களை எளிதாக பதிவு செய்யமுடியும். இது வெளிப்படையான மற்றும் கட்டமைக்கப்பட்ட தீர்வு முறையை உறுதி செய்ய பதிவு செய்யப்பட்டதும், புகார் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு ஒதுக்கப்படும். தீர்க்கப்படாத புகார்கள் தன்னியக்க உயர்நிலை மேலாண்மை முறையின் (Escalation Mechanism) மூலம் அடுத்த நிலைக்கு அனுப்பப்படும். மேலும் புகார்கள் தேவையான போது மற்ற துறைகளுக்கு மாற்றப்படலாம் அல்லது சரியான அதிகாரிக்கு மீண்டும் ஒதுக்கலாம்.

இந்த தளம் பல பயனர் அணுகலை (Multi-User Access) ஆதரிக்கிறது. இது அதிகாரிகள், நிர்வாகிகள், மற்றும் பணியாளர்கள் புகார்களை கண்காணிக்கவும், நிர்வகிக்கவும் உதவுகிறது. நேரடி அறிவிப்புகள் (Real-Time Notification) மூலம் புகார் நிலைமை மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனர்களுக்கு உடனடியாக தெரியவரும். மேலும் எந்தவொரு தீர்க்கப்படாத அல்லது மீண்டும் ஏற்படும் புகார்களையும் மறுபடியும் திறக்க (Reopen) முடியும். மேலும் விரிவாக ஆய்வு செய்யவும் தீர்வு காணவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது,

இந்த அமைப்பில் விரிவான அறிக்கைகள் தொகுப்பு (Reports Module) உள்ளடங்கியுள்ளது. இதில் தினசரி (Daily), வாரந்தோறும் (Weekly), மாதாந்திர (Monthly) அறிக்கைகள் மற்றும் மேலாண்மை தகவல் அமைப்பு (MIS Reports) ஆகியவை உருவாக்கப் படுகின்றன. இதன் மூலம் நிர்வாக முடிவுகளை எளிதாக மேற்கொள்ள முடியும். ICTS புகார் கண்காணிப்பு அமைப்பு மூலம் பொதுமக்கள் குறைகளை விரைவாக தீர்க்கும் செயல்முறை மேம்படுத்தப்படுவதோடு, திறன், பொறுப்பு நிலை மற்றும் சிறந்த மக்கள் சேவையை உறுதி செய்கிறது.

CYC மொபைல் செயலி என்பது அதிகாரிகள் புகார்களை விரைவாக தீர்க்கவும், உடனடி நடவடிக்கை எடுக்கவும் உருவாக்கப்பட்ட ஒரு வசதியான பயன்பாடாகும். புகார் ஒதுக்கல், உயர்நிலை பரிசீலனை (Escalation), மாற்றம் (Transfer), மற்றும் நேரடி அறிவிப்புகள் (Real-Time Notifications) போன்ற அனைத்து முக்கிய அம்சங்களையும் கையில் வைத்தே அணுகலாம். அதிகாரிகள் எங்கேயும், எந்நேரமும் புகார்களை தீர்க்கலாம். இது விரைவான நடவடிக்கையை உறுதி செய்கிறது. செயலி எளிதானது, பயனர் நட்பு (Use-Friendly) மற்றும் பணியாளர்களுக்கு பயன்படக்கூடியதாக உள்ளது. புகார்கள் உடனடியாக புதுப்பிக்கலாம், புகைப்படங்கள் மற்றும் இட விவரங்கள் (Geolocation) பதிவேற்றம் செய்யலாம். இதன் மூலம்

முழுமையான வெளிப்படைத்தன்மை ஏற்படுகிறது. செயலி பல பயனர் அணுகலை ( Multi-User Access) ஆதரிக்கிறது. இதனால் துறைகள் இடையே சிறப்பாக இணைந்து பணியாற்றலாம். இந்த அனைத்து அம்சங்களும் கைபேசியில் உள்ளதால், CYC மொபைல் செயலி புகார் தீர்வை எளிதாக்கி, மக்கள் சேவையை மேம்படுத்த ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### III. நம்ம கோவை மொபைல் பயன்பாடு Namma Kovai

நம்ம கோவை மொபைல் பயன்பாடு, கோயம்புத்தூர் மாநகராட்சி (CCMC) உருவாக்கிய ஒன்றியமான தளமாகும், இது குடிமக்களின் ஈடுபாட்டைப் பெருக்கி, முக்கிய நகரத் தகவல்களை வழங்க உருவாக்கப்பட்டுள்ளது. புகார் மனுக்கள் தாக்கல், சுற்றுலா தகவல்கள் நகர மேம்பாட்டு அறிவிப்புகள், அவசர தொலைபேசி எண்கள், மேயர் மற்றும் ஆணையரின் நிகழ்வுகள் ஆகிய பல்வேறு வசதிகளை வழங்குகிறது. மேலும் தன்னார்வலர்கள் பதிவு, மாநகராட்சி பள்ளிகளின் தகவல்கள், வரிவசூல் மையங்களின் இருப்பிடம் மற்றும் அதிகாரப்பூர்வ செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளையும் கொண்டுள்ளது. இந்த பயன்பாடு தகவல் வெளிப்படைமையை உறுதிசெய்து, குடிமக்கள் நகர வளர்ச்சியில் செயலியை செயல்படுத்த ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## பாதாளசாக்கடை திட்டம்

**1. கோயம்புத்தூர் மாநகராட்சியில் 40 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நஞ்சுண்டாபுரம் பகுதியில்உள்ள விடுபட்ட பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கும் பணி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வெளியேற்றுவதற்கு ஏற்கனவே உள்ள 600மி.மீ விட்டமுள்ள குழாயை மாற்றி 1200 மி.மீ விட்டமுள்ள புதிய குழாய் பதிக்கும் பணி**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் நஞ்சுண்டாபுரம் பகுதியில் தற்போது 40 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது இயங்கி வருகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டு வெளியே வரும் நீரை அருகில் உள்ள நொய்யல் ஆற்றில் விடுவதற்கு தற்போது 780 மீட்டர் நீளத்தில் உள்ள 600 மி.மீ விட்டமுள்ள குழாய் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் இல்லாமல் விடுபட்டுள்ளது. எனவே விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு ஏற்படுத்துவது அவசியமாகிறது. தற்போது இயக்கத்தில் இருக்கும் 40 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுநீர் வரத்து குறைவாக உள்ளதால் சராசரியாக நாள் ஒன்றுக்கு 20 MLD கொள்ளளவு கழிவுநீர் மட்டுமே சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. 20 MLD கொள்ளளவு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை அருகில் உள்ள நொய்யல் ஆற்றில் விடுவதற்கு 600 மி.மீ விட்டமுள்ள குழாயே போதுமான நிலையில் உள்ளது. மேலே கூறிய சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள பாதாள சாக்கடை இணைப்பு விடுபட்ட பகுதிகளுக்கு இணைப்புகளை வழங்கி பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு தற்போது சுத்திகரிப்பு நிலையத்திற்கு வரும் கொள்ளளவை விட அதிக அளவில் வரும் கழிவுநீர் வரத்தை சுத்திகரிப்பு செய்து அதனை ஆற்றில் விடுவதற்கு தற்போது உள்ள 600 மி.மீ விட்டமுள்ள குழாய் போதுமானதாக இல்லாத நிலையில் குழாயின் விட்டத்தை 1200 மி.மீ விட்டமாக மாற்றி அமைக்க வேண்டியது அவசியம் என்பதால் 780 மீட்டர் நீளத்திற்கு ஏற்கனவே உள்ள 600 மி.மீ

விட்டமுள்ள குழாயை மாற்றி அமைப்பதற்கும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள பாதாளசாக்கடை இணைப்புகள் விடுபட்ட பகுதிகளுக்கு சேகரிப்பு குழாய் (Collection System) சுமார் 2300 மீட்டர் நீளத்திற்கு அமைப்பதற்கும், அதே பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு சுமார் 900-க்கும் மேற்பட்ட இணைப்பு குழாய்கள் (HSC) அரசு நிதி உதவி பெற்று அமைப்பதற்கும் ஏற்படும் செலவினத் தொகை ரூ. 8.25 கோடியாகும்.

## 2. விடுபட்டபகுதிகளில்பாதாளசாக்கடைகுழாய்கள்பதிக்க

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்க காளப்பட்டி மற்றும் விளாங்குறிச்சி பகுதிகளில் விடுபட்ட இடத்தில் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ரூ.603 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் .

## 3. பழைய பாதாள சாக்கடை திட்டத்தில் பதிக்கப்பட்ட குழாய்களை பராமரித்தல்

1960 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பழைய பாதாளசாக்கடை திட்டத்தில் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த குழாய்களை பதிக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ரூ.600 கோடி மதிப்பீட்டில் அரசு நிதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 4. புதியதாக வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம்

பழைய பாதாள சாக்கடை திட்டத்தில் உள்ள பகுதிகளில் புதியதாக வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தில் அரசு நிதி உதவியுடன் ரூ.205 கோடிக்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 5. கோயம்புத்தூர் மாநகராட்சியில் 60 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒண்டிப்புதூர் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு குழாய்கள் அமைக்கும் பணி

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஒண்டிப்புதூர் பகுதியில் தற்போது 60 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது இயங்கி வருகிறது. இப்பகுதியில் உள்ள சில குடியிருப்புகள் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புக் குழாய்களின்றி உள்ளது. மேலும் ஏற்கனவே உள்ள வீட்டு இணைப்பு குழாய்கள் சேதமடைந்துள்ளது. எனவே தற்போது உள்ள பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு குழாய்களை மாற்றி அமைக்கவும், விடுபட்ட குடியிருப்புகளுக்கு புதிய பாதாள சாக்கடை இணைப்புகள் 25,000 எண்ணிக்கையில் வழங்கும் பணி அவசியமாகிறது. எனவே, இப்பணியை மேற்கொள்ள ஏற்படும் செலவினத் தொகை ரூ. 30 கோடியாகும்.

### 6. சின்னவேடம்பட்டி ஏரியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (STP) அமைத்தல்

கோயம்புத்தூரில் உள்ள சின்னவேடம்பட்டியில் 9.95 MLD திறன் கொண்ட 23.39 உச்சகாரணியுடன் SBR தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஒரு புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) கட்ட முன்மொழியப்பட்டுள்ளது. 9.95 MLD STP ஆலையின் கட்டுமானத்திலிருந்து இதன் நோக்கம் தொடங்குகிறது. தொடர் தொகுதி எதிர்வினை (SBR) தொழில்நுட்பத்தின் அடிப்படையில் STP ஆலை இருக்க வேண்டும் மற்றும் NIT / ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விரும்பிய சிகிச்சை பண்புகளை பூர்த்தி செய்யவேண்டும்.

இதனடிப்படையில் பம்பிங் நிலையங்களிலிருந்து வரும் கச்சாகழிவுநீர் உயரும் பிரதான குழாய் வழியாக STP யின் நுழைவு அறைக்கு பம்ப் செய்யப்பட்டு பெரிய மிதக்கும் துகள்கள், எண்ணெய், கிரீஸ் மற்றும் மந்தமான கனிமங்களை முதன்மை நிலை சிகிச்சையின் மூலம் வெளியேற்றப்பட்டு நோய்க்கிருமி நுண்ணுயிரிகள் இரண்டாம் நிலை

சிகிச்சையில் குளோரினேஷன் அமைப்பு மூலம் அகற்றப்படுகிறது. இறுதியில் வெளிவரும் சேறு மாநகராட்சியில் உள்ள மைக்ரோ உரமையத்திற்கு உரங்களாக மாற்ற கொண்டு செல்லப்பட்டு நீர் வழங்கப்பட்ட சேறு செறிவூட்டப்பட்டு பின்பு உரமாக பயன்படுத்தப்படும். இவ்வாறு சிகிச்சையளிக்கப்பட்ட நீர் மூன்றாம் நிலை சிகிச்சை பிரிவின் மூலம் மேலும் சுத்திகரிக்கப்பட்டு பல்வேறு மறுபயன்பாட்டிற்கு ஏற்புடையதாக அமைகிறது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை சின்னவேடம்பட்டி ஏரியில் வெளியேற்றுவதன் மூலம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நோக்கம் முடிவடைகிறது. மேலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரானது குறைந்த அளவிலான இரசாயன மற்றும் உயிரியல் மாசுக்களுடன், சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதார பாதுகாப்பை உறுதிசெய்து பரந்த அளவிலான பயன்பாடுகளுக்கு ஏற்றதாக அமைகிறது.

எனவே ரூ.10 கோடி மதிப்பீட்டில் இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 7. SIDCO எஸ்டேட்டில் உள்ள தொழில்களுக்கான நீர் மறுபயன்பாட்டிற்காக உக்கடம் STP-யில் விநியோக குழாய்களுடன் கூடிய 25 MLD கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட மறுபயன்பாட்டு நீர் ஆலை

கோயம்புத்தூர் ஒரு முக்கிய தொழில்துறை மையமாகும், ஜவுளி, உற்பத்தி, உணவு பதப்படுத்துதல் மற்றும் பொறியியல் போன்ற துறைகள் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றன, இருப்பினும், விரைவான தொழில்மயமாக்கல் புதிய நீருக்கான தேவையை அதிகரிக்க வழிவகுத்துள்ளது. இது நிலையான நீர் மேலாண்மைக்கு சவால்களை ஏற்படுத்தியுள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (STPs) இருந்து சுத்திகரிக்கப்பட்ட மூன்றாம் நிலை தலைகீழ் சவ்வூடுபரவல் (TTRO) நீரை மீண்டும் பயன்படுத்துவது நன்னீர் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான ஒரு புதுமையான மற்றும் சுற்றுச்சூழல் நட்பு தீர்வை வழங்குகிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, 06.03.2024 தேதியிட்ட G.O. (Ms) எண். 29 இன்மூலம், SIDCO எஸ்டேட்டில் உள்ள

தொழிற்சாலைகளுக்கு நீரை மீண்டும் பயன்படுத்துவதற்காக, உக்கடம் STP இல் 25 MLD கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட மறுபயன்பாட்டு நீர்ஆலையை விநியோகிக்கும் திட்டத்திற்கு 245 கோடி ரூபாய் செலவில் ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 73.50 கோடி இந்திய அரசின் பங்காகவும், மீதமுள்ளவை PPP பங்காகவும் இருக்கும். இந்த திட்டம் PPP திட்டமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் ஒரு தனித்துவமான மாதிரியாகும், இதில் STP நீர் சுத்திகரிக்கப்பட்டு, மீண்டும் பயன்படுத்தப்படுகிறது மற்றும் வணிக மாதிரியின் கீழ் தொழில்துறை பயன்பாட்டிற்கு வழங்கப்படுகிறது. இதில், கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை (DFR) மதிப்பிடுவதற்கும், வழித்தடத்திற்குள் சாத்தியமான வாங்குபவர்களின் தேவை மதிப்பீட்டைப் பெறுவதற்கும் ஒரு தொழில்நுட்ப ஆலோசகரை நியமித்துள்ளது. கோயம்புத்தூரில் TTRO நீர் ஆதாரங்கள் தேவைப்படும் தொழில்துறை கிளஸ்டர்களைக் கண்டறிந்து வரைபடமாக்குவது, தொழிற்சாலைகளின் நன்னீர் நுகர்வு முறைகளை மதிப்பிடுவது மற்றும் நிலைத்தன்மைகளை மதிப்பிடுவது, தற்போதுள்ள STP-களில் இருந்து TTRO தண்ணீரை இந்த கிளஸ்டர்களுக்கு வழங்குவதற்கான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகளைத் தீர்மானிப்பது, TTRO நீர் விநியோகத்தை படிப்படியாக செயல்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவது, தொழில்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் மற்றும் கட்டுமானத்துறைகள் போன்ற பங்குதாரர்களுடன் இணைந்து அவர்களின் தேவைகளைச் சேகரிப்பது ஆகியவை இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இச்சாத்தியக்கூறு ஆய்வு பலகட்டங்களில் மேற்கொள்ளப்படும். நீர்-தீவிர தொழில்களை அடையாளம் காணுதல் மற்றும் மேப்பிங் செய்தல் போன்ற இரண்டு நிலை ஆய்வுகளைக் கொண்ட விரிவான மதிப்பீட்டை உறுதி செய்யும். தொழில்துறை கிளஸ்டர் அடையாளம், மேப்பிங் & நன்னீர் தேவை மற்றும் கிடைக்கும் தன்மை மதிப்பீடு கோயம்புத்தூரின் தொழில்துறை கிளஸ்டர்களில் TTRO நீர் மறுபயன்பாட்டு தீர்வுகளை

செயல்படுத்துவதற்கான ஒரு சாலை வரைபடமாக இந்த திட்டத்தின் முடிவு செயல்படும். நன்னீர் சார்பு நிலையைக் குறைப்பதன் மூலமும், குறைந்த செலவில் நீர் விநியோகத்தை உறுதி செய்வதன் மூலமும், நிலையான தொழில்துறை வளர்ச்சியை வளர்ப்பதன் மூலமும், இந்தத் திட்டம் பிராந்தியத்தில் நீர் பாதுகாப்பில் ஒரு மாற்றத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். படிப்படியாக செயல்படுத்தும் அணுகுமுறை, படிப்படியாக ஏற்றுக்கொள்ளல், உள்கட்டமைப்பு அளவிடுதல் மற்றும் நீண்டகால நம்பகத்தன்மையை உறுதி செய்து கோயம்புத்தூரை தொழில்துறை மையங்களில் நீர்நிலைத்தன்மைக்கு ஒரு மாதிரியாக விளங்கும் என்பதால் இந்நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## குடிநீர் விநியோகம்

**1. கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி, வீரகேரளம், துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, காளப்பட்டி, விளாங்குறிச்சி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய பகுதிகளின் மனைப்பிரிவில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வீட்டு இணைப்பு குழாய் மற்றும் பிரதான குழாய் பதித்தல் பணி**

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி, வீரகேரளம், துடியலூர், வெள்ளக்கிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, காளப்பட்டி, விளாங்குறிச்சி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய பகுதிகளில் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் பிரதான குழாய்கள் மற்றும் வீட்டு இணைப்பு குழாய்கள் பதிக்கும் பணி முடிவுற்றது. இத்திட்டம் தயார் செய்யப்பட்ட ஆண்டிற்குபின் புதியதாக அமைக்கப்பட்ட மனைப்பிரிவு பகுதிகளில் இதுவரை பிரதான குழாய்கள் அமைக்காமலும், ஏற்கனவே உள்ள கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் திட்டப்பணி, பில்லூர்3 மற்றும் 8 Added area பிரதான குழாய்களில் சீரான குடிநீர் விநியோகம் இல்லாத பகுதிகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கவும், பிரதான குழாய், பகிர்மான குழாய் மற்றும் வீட்டு இணைப்புகள் வழங்க விஸ்தரிப்பு செய்து பணி மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூ. 320 கோடிக்கு தயார் செய்யப்பட்டு வருகிறது. இதற்கென மாநகராட்சி பங்குத் தொகை 20 % ரூ.64 கோடி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**2. தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுதல்**

கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்படாத பகுதிகள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மனைப் பகுதிகளில், குடிநீர் விநியோகம் செய்ய இயலாத பகுதிகளுக்கு தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு குடிநீர் விநியோகம் செய்ய ரூ.2 கோடி செலவினம் ஏற்படும்.

### 3. சிறுவாணி அணையின் பராமரிப்பு பணிகள்

கோயம்புத்தூர் மாநகராட்சியின் முக்கிய நீர் ஆதாரங்களில் சிறுவாணி அணையும் ஒன்றாகும். இந்த அணையினை பராமரிக்கவும், நீர் கசிவுகளை தடுக்கவும், தமிழ்நாடு அரசு மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக கேரளா அரசு பொறியாளர்கள் குழு, கோவை மாநகராட்சி அதிகாரிகள் குழு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் குழு, சென்னை IIT பொறியாளர் ஆகியோருடன் மத்திய குடிநீர் மற்றும் மின்சார ஆராய்ச்சி கழகம், புனே பொறியாளர்களுடன் 08.01.2025 அன்று சிறுவாணி அணைப்பகுதி முழுவதும் ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி, மத்திய குடிநீர் மற்றும் மின்சார ஆராய்ச்சி கழக பொறியாளர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி கேரள அரசு நிர்வாகத்துடன் கோயம்புத்தூர் மாநகராட்சியும் இணைந்து சிறுவாணி அணையினை பராமரிக்க அனைத்து வகையான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இப்பராமரிப்பு பணிகள் ரூ.10 கோடிக்கு மாநகராட்சி பொது நிதியில் பணிகள் எடுக்கப்படும்.

### 4. நீர் சேமிப்பு தொட்டியினை மழைநீர் சேகரிப்பு தொட்டிகளாக மாற்றுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 24x7 குடிநீர் திட்டப் பணி மேற்கொள்ளும் பகுதிகளில் ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள தரைமட்ட நீர் சேமிப்பு தொட்டியினை (Sump), மழைநீர் சேகரிப்பு தொட்டிகளாக மாற்றி உபயோகப்படுத்த வேண்டியதின் அவசியத்தினை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்து மழைநீர் சேகரிக்க உரிய நடவடிக்கைகள் இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

### 5. குடிநீர் விநியோக பணிகள் மேம்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் வார்டு எண் 13 க்குட்ப்பட்ட உடையாம்பாளையம், நஞ்சேகவுண்டன்புதூர் மற்றும் சீனிவாசா நகர் பகுதிக்கு பில்லூர் 3-வது குடிநீர் சின்னவேடம்பட்டி வழியாக வருவதால் மேல்நிலை தொட்டிகளுக்கு குடிநீர் வந்து சேருவதற்கு கூடுதல் நேரம் தேவைபடுவதால், நஞ்சேகவுண்டன்புதூர் வழியாக குடிநீர் இணைப்பு ஏற்படுத்தினால் விரைவில் மேற்கண்ட பகுதி மேல்நிலை தொட்டிகளுக்கு குடிநீர் வழங்க இயலும். இப்பணிகளை மேற்கொள்ள ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு இந்நிதியாண்டில் ஏற்படுத்தப்படும்.

# திடக்கழிவு மேலாண்மை திட்டம்

### 1. வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் கண்காணிப்பு கட்டிடம் கட்டுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் 2 கொள்கலன் அறைகள் (Container Rooms) 800 சதுர அடிக்கு அலுவலகம், அலுவலக உபகரணங்கள் மற்றும் கழிப்பறை அமைக்க ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 2. தெருவிளக்குகள் மற்றும் சென்டர் மீடியன் அமைத்தல்

வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் 100 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் மற்றும் 5 எண்ணிக்கையிலான சென்டர்மீடியன் விளக்குகள் அமைப்பதற்கு உத்தேசமாக ரூ.1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 3. வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் உள்ள மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றியமைத்தல்

வெள்ளலூர் குப்பைக் கிடங்கினுள் உள்ள சாலையினை 3.50 கி.மீ நீளத்திற்கு புதுப்பிக்க ரூ.2 கோடியில் தார்சாலைகள் அமைக்கப்படும்.

### 4. கண்காணிப்பு கேமராக்கள், பாதுகாவலருக்கான செக்யூரிட்டி அறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைத்தல்

கண்காணிப்பு கேமராக்கள், பாதுகாவலருக்கான செக்யூரிட்டி அறைகள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 5. வெள்ளலூர் குப்பைக் கிடங்கினை பசுமை பகுதியாக மாற்றுதல்

வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் தற்போது சுமார் 3000 மரக்கன்றுகள் நடப்பட்டு உள்ளது, மேலும் இப்பகுதியினை பசுமை பகுதியாக மாற்ற 11 ஏக்கரில் 25,000 மரக்கன்றுகள் நடப்படும். இப்பணிக்கு ரூ.75 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**6. குப்பைக் கிடங்கில் தீ விபத்து ஏற்படும் நேரங்களில் தங்கு தடையின்றி தண்ணீரை கொண்டு வர கூடுதலாக மின்மோட்டார்கள் அமைத்தல் பணி**

வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் தீ விபத்து ஏற்படும் நேரங்களில் தங்கு தடையின்றி தண்ணீரை கொண்டு வர கூடுதலாக மின்மோட்டார்கள் மற்றும் குழாய்கள் அமைக்க ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**7. குப்பைக் கிடங்கிலிருந்து மின் உற்பத்தி செய்தல் ( Waste to Energy)**

Bio - Mining முறையில் மீட்கப்பட்ட 54 ஏக்கர் நிலத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் சேகரமாகும் தினசரி 600 டன் திடக்கழிவினை குப்பைக் கிடங்கிலிருந்து மின் உற்பத்தி செய்ய ( Waste to Energy Plant) உரிய திட்ட மதிப்பீடுகளை பெற்று அரசு உதவியுடன் செயலாக்கத்திற்கு கொண்டு வர சுமார் ரூ. 450 கோடிக்கு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**8. MCC , MRF & Dry waste collection centre பராமரித்தல் பணி**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட MCC , MRF & Dry waste collection centre பராமரிப்பு பணிக்கு ரூ.1 கோடியில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**9. இயற்கை எரிவாயு மையம் (Bio CNG)**

கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் தினந்தோறும் சேகரமாகும் மக்கும் கழிவுகளை அகற்றுவதற்கு ரூ.69.20 கோடி மதிப்பீட்டில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership Mode) 250 மெட்ரிக்டன் அளவுள்ள இயற்கை எரிவாயு மையம் (Bio CNG) ஏற்படுத்த நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

### 10. Bio - Mining திட்டம்

வெள்ளலூர் உரக்கிடங்கு மேம்பாட்டு பணிக்காக ஏற்கெனவே உள்ள பழைய கழிவுகளை அறிவியல் ரீதியாக அகற்றுவதற்கு ரூ.60 கோடி மதிப்பீட்டில் Bio Mining திட்டம் (Phase-1) செயல்படுத்தி முடிக்கப்பட்டு 54 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு உள்ளது.

மேலும் மீதமுள்ள அனைத்து பழைய குப்பைகளை அகற்றுவதற்கு தூய்மை பாரத இந்தியா திட்டத்தின் பங்களிப்பு 41 சதவீதம், மீதமுள்ள நிதி பொது நிதியிலிருந்து / CFC நிதியிலிருந்து ரூ.58.54 கோடி (Phase-2) திட்டம் தயாரிக்கப்பட்டு 7,94,139 மெட்ரிக் டன் கொண்ட குப்பைகளை Bio -Mining முறையில் பணி செய்வதற்கு 28.01.2025-ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, 12.02.2025 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளது,

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் சுற்றுச் சூழல் ஆய்வுகள்மையம் (CES), பதப்படுத்தப்பட்டு அகற்றப்பட வேண்டிய மொத்த மரபு கழிவுகளை இறுதி செய்து ஒப்புதல் அளிக்க கணக்கெடுப்பை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. இப்பணிகள் அனைத்தும் முடிவுறும்போது கூடுதலாக 84.62 ஏக்கர் நிலம் மீட்கப்பட உள்ளது.

இது தவிர, கோயம்புத்தூர் மாநகராட்சி, பழைய மரபு கழிவுகளில் ஏற்படும் தீ விபத்துகளைத் தணிக்க, தீயணைப்பு ஹைட்ராண்டுகள், ஏற்கனவே உள்ள குளம் அமைப்பை செயல்படுத்துதல், OHT & சம்ப் நீர்சேமிப்பு தொட்டி மற்றும் குழாய் இணைப்புகளை செயல்படுத்துதல், 12 பம்ப்செட்டுகள், தண்ணீர் டேங்கர்கள் மற்றும் 24X7 பணியாளர்கள் மூலம் மகத்தான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

### 11. KPI (Key Performance Indicator) அமைப்பு மூலம் முதன்மை சேகரிப்புப் பணிகளை தனியார் மயமாக்குதல்

கோயம்புத்தூர் நகர மாநகராட்சி (CMC) முன்பு திடக்கழிவு சேகரிப்பை நிர்வகித்து வந்தது. இதில் குடியிருப்பாளர்கள், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து

பிரிக்கப்பட்ட ஈரமான மற்றும் உலர்ந்த கழிவுகளை வீடு வீடாகச் சேகரித்தல் அடங்கும். இதில் வீட்டு அபாயகரமான கழிவுகளை சேகரித்தல், மின்-கழிவுகள், தெரு துடைத்தல், சமூகக் கழிவு சேமிப்புத் தொட்டிகளை வழங்குதல் மற்றும் சேகரிக்கப்பட்ட கழிவுகளை தேவையான மனிதவளம் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்தி செயலாக்க மையங்கள் மற்றும் நியமிக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு செல்வது ஆகியவை இதில் அடங்கும்.

செயல்திறனை மேம்படுத்துவதற்காக, குடியிருப்பு மற்றும் வணிகப் பகுதிகளிலிருந்து வீடு வீடாகச் சேகரித்தல் மற்றும் திடக்கழிவுகளைப் பிரித்தல் போன்ற முதன்மை சேகரிப்பு பணிகளைக் கையாள CMC ஒரு சேவை வழங்குநரை நியமித்தது. பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்கள் (BOVகள்), இலகுரக வணிக வாகனங்கள் (LCVகள்) மற்றும் கனரக வணிக வாகனங்கள் (HCVகள்) மூலம் கழிவுகள் நியமிக்கப்பட்ட செயலாக்க மையங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. நியமிக்கப்பட்ட இடங்கள், துணை கிடங்குகள் மற்றும் சேகரிப்பு புள்ளிகளில் இருந்து நகராட்சி திடக்கழிவுகளை (MSW) சேகரித்து செயலாக்க மையங்கள் அல்லது அகற்றும் தளங்களுக்கு கொண்டு செல்வதற்கும் சேவை வழங்குநர் பொறுப்பாவார். கூடுதலாக, அவர்கள் தெருக்கள், சாலைகள், நடைபாதைகள் மற்றும் நடைபாதைகளில் இருந்து துப்புரவு செய்தல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு சேகரிப்பு ஆகியவற்றை மேற்பார்வையிடுகிறார்கள். அத்துடன் பொதுக் கூட்டங்கள், திருவிழாக்கள் மற்றும் நிகழ்வுகள் உள்ளிட்ட சிறப்பு பாதுகாப்புப் பகுதிகளுக்கான கழிவு மேலாண்மையையும் மேற்கொள்கின்றனர். சமூகத் தொட்டிகள் மற்றும் சேமிப்புப் புள்ளிகளிலிருந்து கழிவுகளை நியமிக்கப்பட்ட இடங்களுக்கு இரண்டாம் நிலை போக்குவரத்து செய்வதும், தெருக்கள் மற்றும் சாலைகளில் இருந்து சாலையோர அதிகப்படியான மண்ணை அகற்றுவதும் அவர்களின் பொறுப்புகளின் ஒரு பகுதியாகும். சேவை வழங்குநருக்கான கொடுப்பனவுகள் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIகள்) அடிப்படையில் கட்டமைக்கப்படுகின்றன.

அவை கழிவு மேலாண்மை நடவடிக்கைகளில் செயல்திறன் மற்றும் இணக்கத்தை அளவிடுகின்றன. ஒதுக்கப்பட்ட கழிவு அளவிற்கான மேற்கோள் காட்டப்பட்ட விகிதத்தில் ஒரு நிலையான 50% முன்கூட்டியே செலுத்தப்படுகிறது. மீதமுள்ள 50% KPI மதிப்பீடுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது, இதில் தினசரி செயல்திறன் மற்றும் இணங்காததற்கான அபராதங்கள் அடங்கும். ஒவ்வொரு மாதமும் 10 வேலை நாட்களுக்குள் பணம் செலுத்தப்படுவதை ஆணையர் உறுதிசெய்கிறார். திடக்கழிவு மேலாண்மைக்கான டன் ஒன்றுக்கு விகிதம் ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் ஒதுக்கப்பட்ட எடையின் படி பிரிக்கப்படுகிறது. மூலத்தில் பிரிப்பதை ஊக்குவிப்பதற்காக நகர்புற உள்ளாட்சி அமைப்பு (ULB) ஏற்பாடு செய்த விழிப்புணர்வு திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒப்பந்ததாரர் 100% பிரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பை அடைய வேண்டும். கழிவு மேலாண்மையில் பொறுப்புணர்வையும் செயல்திறனையும் உறுதி செய்யும் வகையில், நியமிக்கப்பட்ட இடங்களில் பெறப்படும் பிரிக்கப்பட்ட கழிவுகளின் அளவின் படி பணம் வழங்குவது நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக ரூ.153.82 கோடிக்கு பதினைந்தாவது மத்திய நிதிகுழு மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 12. குப்பை மாற்று நிலையங்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பீளமேடு மற்றும் உக்கடம் பகுதியில் தினசரி 200 TPD அளவு குப்பை மாற்று நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. சத்தி ரோடு பகுதியில் 150 TPD அளவு குப்பை மாற்று நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி மார்ச் 2025-க்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும் மாநகராட்சியில் புதியதாக கோவைப்புதூர், கவுண்டம்பாளையம் மற்றும் பீளமேடு பகுதியில் தினசரி 200 TPD மூன்று குப்பை மாற்று நிலையம் அமைக்க தூய்மை பாரத இந்தியா திட்டத்தின் பங்களிப்பு 41 சதவீதம், மீதமுள்ளது பொது நிதியிலிருந்து ரூ.29.93

கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. 21.01.2025 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் மார்ச் 2026-க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

### 13. சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிக்கும் குட்டைகள் சீரமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் குப்பை கிடங்கில் மூன்று சுத்திகரிக்கப்பட்ட நீர் சேகரிக்கும் குட்டைகள் (lagoon) உள்ளன. இதில் ஒன்று மட்டும் தற்போது நீர் சேகரிக்கப்பட்டு குப்பை கிடங்கு பணிகளுக்கும், மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள இரண்டு குட்டைகளில் உள்ள முட்புதர்களை அகற்றவும், குட்டை கரையினை பலப்படுத்தவும், குட்டையினை சமப்படுத்தவும் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல்

1. புதியதாக இரண்டு எண்ணிக்கையிலான 11000 லிட்டர் கொள்ளளவு அதிக திறன் கொண்ட பாதாள சாக்கடை அடைப்பு கழிவுகளை நீக்கும் மற்றும் உறிஞ்சும் இயந்திரம் பொருத்திய வாகனங்கள் ரூ.900 இலட்சத்திற்கு அரசு நிதி பெற்று வாகனம்கொள்முதல் செய்யப்படும்.
2. புதியதாக ஐந்து எண்ணிக்கையிலான 6000 லிட்டர் கொள்ளளவு பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் இயந்திரம் பொருத்திய வாகனங்கள் ரூ.300 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்படும்.
3. புதியதாக ஐந்து எண்ணிக்கையிலான 1000 லிட்டர் கொள்ளளவு பாதாள சாக்கடை அடைப்பு நீக்கும் இயந்திரம் பொருத்திய வாகனங்கள் ரூ.110 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்படும்
4. கோயம்புத்தூர் மாநகராட்சி புதியதாக 5 எண்ணிக்கையில் நடமாடும் கழிவறை வாகனங்கள் தலா 5 ஆண்கள், 5 பெண்களுக்கு என மொத்தம் 10 இருக்கைகள் கொண்ட கழிப்பறை வசதியுடன் கூடிய வாகனங்கள் ரூ.175 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்படும்.

5. கோயம்புத்தூர் மாநகராட்சி புதியதாக 2 எண்ணிக்கையில் மரம் அறுக்கும் ஹைட்ராலிக் இயந்திரம் ரூ.60 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்படும்.
6. புதியதாக அலுவலர்கள் பயன்பாட்டிற்கு 5 எண்ணிக்கையிலான ஈப்பு வாகனங்கள் ரூ.65 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்படும்.
7. கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 32 நகர்புற நலவாழ்வு மையங்களுக்கு மருந்துகள், ஊட்டச்சத்து பெட்டகங்கள் மற்றும் பள்ளிகளுக்கு தேவையான Sanitary Napkin விநியோகம் செய்யும் பணிகளுக்கான புதியதாக 1 எண்ணிக்கையில் பிரத்யேகமாக மருந்து கொண்டு செல்ல ரூ.16 இலட்சத்திற்கு வாகனம் கொள் முதல் செய்யப்படும்.
8. கோயம்புத்தூர் மாநகராட்சி மண்டல வார்டு பகுதிகளில் ஆங்காங்கே தெருக்களில் சுற்றிதிரியும் நாய்களை பிடித்து அதனை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் தனியார் கருத்தடை மையங்களுக்கு கொண்டு செல்லும் பணிகளுக்காக புதியதாக 3 எண்ணிக்கையிலான சிறிய இலகுரக வாகனங்கள் ரூ.33 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்படும்.

## நகரமைப்பு பிரிவு

### 1. பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிவேலி அமைத்து பாதுகாத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட காலமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த 37 பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு 25.91 ஏக்கர் நிலம் ரூ.311 கோடி மதிப்பிலான நிலம் மீட்கப்பட்டு முட்கம்பிவேலி அமைத்து பாதுகாப்பு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2024-25 ஆண்டில் 18 பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு முட்கம்பிவேலி அமைத்து பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் ரூ.300 இலட்சம் செலவில் மேலும் 50 எண்ணிக்கையிலான பொது ஒதுக்கீடு இடங்களுக்கு சுற்று வேலி அமைத்து மாநகராட்சியின் அறிவிப்பு பலகை நிறுவி பாதுகாப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2. திட்டசாலைகள்

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட 3 திட்டசாலைகளை அபிவிருத்தி செய்ய ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு கோரி நகர் ஊரமைப்புத்துறைக்கு உத்தேசம் அனுப்பி வைக்கப்பட்டும், நிலஆர்ஜித நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு நில விபரதிட்ட (Land Plan Structure) அட்டவணை அனுப்பி வைக்கப்பட்டு அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு எதிர்பார்க்கப்படுகிறது.

1) விரிவு அபிவிருத்தி திட்டம்-4, ஐஸ்வர்யா நகர் முதல் மருதமலை சாலை வரை உள்ள 30 அடி அகல திட்டசாலை.

2) சரவணம்பட்டி விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5, சரவணம்பட்டி துடியலூர் பிரதான சாலை முதல் மீனாட்சி நகர் வழியாக அண்ணா நகர் வரை 60 அடி அகல திட்டசாலை.

3) சின்னவேடம்பட்டி விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5, துடியலூர் சரவணம்பட்டி பிரதான சாலையை இணைக்கும் தென்வடல் திட்டசாலை (டான்பாஸ்கோ பள்ளி அருகில்) அரசு நிதி பெற்றவுடன் உரிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 3. சாலை தீவுத்திடல்கள்

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலை தீவுத்திடல்களை கண்டறிந்து தனியார் பங்களிப்புடன் புற்கள், செடிகள் மற்றும் நீரூற்று அமைத்து பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கடந்த ஆண்டில் 20 எண்ணிக்கையிலான தீவுத்திடல்களை பராமரிக்க தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 10 எண்ணிக்கையிலான சாலை தீவுத்திடல்கள் பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 4. புவியியல் தகவல் மையம் (Geo Information System) மேம்பாடு

1) கோயம்புத்தூர் மாநகராட்சி 100 வார்டுகளுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் நடைபெறும் பொறியியல் பிரிவு தொடர்பான தெருவிளக்கு பராமரிப்பு, மாநகராட்சி பள்ளிகள் பராமரிப்பு, குடிநீர் மற்றும் கிணற்றுநீர் விநியோகம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள், பொதுக்கழிப்பிடம் பராமரிப்பு உள்ளிட்ட அனைத்து திட்டபணிகள், நகரமைப்பு பிரிவுக்கு உட்பட்ட கட்டிட அனுமதி, பொது ஓதுக்கீடு இடங்களின் விபரம், பூங்கா பராமரிப்பு, விளம்பர பலகைகள் அனுமதி உள்ளிட்ட பணிகள், பொது சுகாதாரப்பிரிவுக்கு உட்பட்ட மருத்துவ கட்டிட வளர்ச்சி பணிகள் தடுப்பூசி முகாம்கள் அமைக்க திட்டமிடுதல் பணி ஆகிய அனைத்து விதமான வளர்ச்சி பணிகளும், அபிவிருத்தி பணிகளும், பராமரிப்பு பணிகளும், புவியியல் தகவல் அடிப்படையில் தகவல் சேகரித்து பதிந்து கூடுதல் அபிவிருத்தி செய்ய புவியியல் தகவல் மையம் (GIS Centre) அமைத்து தற்போது ஆரம்பக்கட்ட பணிக்கு தேவையான அடிப்படை வசதிகள் (4 கணினிகள்) ஏற்படுத்தியும், பணிகள் மேற்கொள்வதற்கு வெளிமுகமை

(out sourcing) மூலம் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு மொத்தம் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டும், கோயம்புத்தூர் மாநகராட்சியின் வரைபடம் GIS மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டு 420-க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடங்கள் பொதுமக்கள் பார்வையிடும் வகையில் website-இல் பதிவேற்றம் செய்ய தயார் நிலையில் உள்ளது. மேலும், 148 பள்ளிகள் மற்றும் 468 அங்கன்வாடி மையங்கள் அவற்றின் அருகிலுள்ள பள்ளிகளுடன் இணைத்து பள்ளிகளின் எல்லை (School Boundary) மற்றும் GPS location ஆகிய தகவல்கள் கள ஆய்வின் மூலம் சரிபார்க்கப்பட்டு GIS மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நிதியாண்டில், புவியியல் தகவல் மைய தரவுகளுக்கான செயற்கைகோள் வரைபடம் Base map (Satellite imagery), ரூ.30 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து அனைத்து விபரங்களும் பதிவேற்றம் செய்யப்படவுள்ளது.

3) புவியியல் தகவல் மையத்தில் பதிவு செய்யப்பட்ட மாநகராட்சியின் தகவல்களை சேமிக்கும் வகையில் Server ரூ.30 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்து பதிவு செய்யப்பட்ட விபரங்கள் அனைத்தும் Server-இல் சேமிக்கப்படவுள்ளது

### 5. S- வளைவு சாலை அபிவிருத்தி

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண்.24, தண்ணீர் பந்தல் சாலை "S" வளைவு பகுதியினை நிலஆர்ஜிதம் செய்து அபிவிருத்தி செய்யும் உத்தேசம் ரூ.650 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 6. கோயம்புத்தூர் மெட்ரோ ரயில் திட்டம்

கோயம்புத்தூர் மெட்ரோ ரயில் திட்டத்திற்காக நிலவிபரத்திட்ட அட்டவணை மற்றும் நிலஅளவீடு குறித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு ஜியோ-ஸ்பேசியல்

தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி நிலஅளவை பணிகளை மேற்கொள்ளும் உத்தேசம் ரூ.200 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 7. சத்தியமங்கலம் சாலை விரிவாக்கம்

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட சத்தியமங்கலம் சாலைப் பகுதியினை விரிவாக்கம் செய்ய கோயம்புத்தூர் மெட்ரோவிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று 24மீ அகலத்திற்கு நிலஆர்ஜித பணி மேற்கொள்ளும் உத்தேசம் ரூ.15400 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 8. டிஜிட்டல் தொழில்நுட்ப கருவி (Differntial Global Positioning System) மூலம் நிலஅளவை பணிகளை மேற்கொள்ளுதல்

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் நிலஅளவீடு பணிகளை மேற்கொள்ள டிஜிட்டல் தொழில்நுட்பகருவி (GDPS) ரூ.7.00 இலட்சத்தில் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோன்று மேற்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்தியம் ஆகிய பிற 4 மண்டலங்களிலும் நடப்பு நிதியாண்டில் நிலஅளவை பணிகள் மேற்கொள்ள டிஜிட்டல் தொழில்நுட்ப கருவி கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளும் உத்தேசம் ரூ.28 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### 9. நொய்யல் ஆறு அளவீடு செய்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட நொய்யல் ஆறு பகுதிகளில் உரிமம் பெற்ற நிலஅளவர்கள் மூலமாக அளவீடு செய்யும் பணிக்கு உத்தேசம் ரூ.3 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**10. சங்கனூர் பள்ளம் அளவீடு செய்தல்**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட சங்கனூர் பகுதிகளில் உரிமம் பெற்ற நிலஅளவர்கள் மூலமாக அளவீடு செய்யும் உத்தேசம் ரூ.10 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**11. மணியகாரன் பாளையம் நீர்நிலை பகுதிகளை அளவீடு செய்தல்**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட மணியகாரன் பாளையம் பகுதிகளில் உரிமம் பெற்ற நிலஅளவர்கள் மூலமாக அளவீடு செய்யும் உத்தேசம் ரூ.3 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**12. சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.29 –இல் அமையும் 40 அடி அகல திட்ட சாலையை அபிவிருத்தி செய்தல்**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.29-இல் அமையும் 40 அடி அகல திட்ட சாலையினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, சௌரிபாளையம் பீளமேடு பிரதான சாலை தேர் வீதி முதல் மகாலட்சுமி கோவில் வரை 450 மீ நீளத்திற்கு கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும அபிவிருத்தி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று திட்டசாலை விஸ்தரிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# மாமன்றப் பிரிவு

## 1. மாமன்ற உறுப்பினர்களுக்கான பயிற்சி வழங்குதல்

மேலும் அதனைத் தொடர்ந்து இந்நிதியாண்டில் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் மூலம் 04.03.2025 முதல் 21.03.2025 வரை மாமன்ற உறுப்பினர்களுக்கு உதகமண்டலத்தில் உள்ள ஹோட்டல் தமிழ்நாடு இடத்தில் புத்தாக்கல் பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து வரும் நிதியாண்டில் இது போன்ற பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2. மாண்புமிகு மேயர் விருப்ப நிதி

மக்கள் குறைத் தீர்க்கும் கூட்டங்களின்போது, மாண்புமிகு மேயர் அவர்களின் கள ஆய்வின் போது பொதுமக்களால் தெரிவிக்கப்படும் குறைகளை சரிசெய்யும் விதமாக மாண்புமிகு மேயர் விருப்ப நிதி இந்நிதியாண்டில் ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வருவாய் பிரிவு

### கோயம்புத்தூர் மாநகராட்சி – புனரமைக்கப்பட்ட சந்தைகள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ஏலம் விடுவதன் மூலம் வருவாய் ஈட்டுதல்

1. மத்திய மண்டலம் வார்டு எண் 69-ல் புனரமைக்கப்பட்ட அண்ணா காய்கறி சந்தை ஏலம் விடுவதன் மூலம் ரூ.2.00கோடிவருவாய் ஈட்டலாம்.
2. மத்திய மண்டலம் வார்டு எண்.83 அரசு பொது மருத்துவமனைக்கு எதிரில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு மற்றும் நான்கு சக்கரவாகனம் நிறுத்துமிடம் ஏலம் விடுவதன் மூலம் ரூ.9 இலட்சம் வார்டுஎண். 83, செல்லப்பன் வீதியில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு சக்கர வாகன நிறுத்துமிடம் ஏலம் விடுவதன் மூலம் ரூ.4 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.
3. தெற்கு மண்டலம், சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏலம் விடுவதன் மூலம் ரூ.20 இலட்சம் வருவாய் ஈட்டலாம்.
4. கிழக்கு மண்டலம், சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஏலம் விடுவதன் மூலம் ரூ.7 இலட்சம் ஏலம் விடுவதன் மூலம் வருவாய் ஈட்டலாம்.
